ஜாய்ஸ் மேயர்

# உடைந்த உள்ளங்களைக் குணமாக்குதல்



வேதவசனத்தின் வல்லமையால் நலமடைதல்

# உடைந்த உள்ளங்களைக் குணமாக்குதல்

# உடைந்த உள்ளங்களைக் குணமாக்குதல்

*வேதவசனத்தின்*
*வல்லமையால் நலமடைதல்*

ஜாய்ஸ் மேயர்

JOYCE MEYER
MINISTRIES®

Nanakramguda, Hyderabad - 500 008

Unless otherwise indicated, all Scripture quotations are taken from the *The Amplified Bible* (AMP). *The Amplified Bible, Old Testament* copyright © 1965, 1987 by The Zondervan Corporation. *The Amplified New Testament,* copyright © 1954, 1958, 1987 by The Lockman Foundation. Used by permission.

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda,
Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Healing the Brokenhearted - Tamil
*Experience Restoration Through The Power of God's Word*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

# பொருளடக்கம்

முன்னுரை: வேதவசனம் vii

1. தேவனுடைய அன்பை அனுபவித்தல் 1

2. உங்கள் எதிர்காலத்தின் நிச்சயம் 15

3. கிறிஸ்துவில் உங்கள் நீதியை அறிதல் 29

4. உங்கள் வாழ்விலுள்ள பயத்தை வெல்லுதல் 43

முடிவுரை: உறுதியாக நில்லுங்கள்! 55

வேதவசன அறிக்கைகள் 57

முன்னுரை: தேவனுடைய வசனம் 57
தேவனுடைய அன்பு 59
உங்கள் எதிர்காலம் 64
கிறிஸ்துவில் உங்கள் நீதி 69
பயத்தை வெற்றிகொள்ளுதல் 74
*முடிவுரை: உறுதியாக நில்லுங்கள்* 80

ஆசிரியரைப் பற்றி 81

# முன்னுரை:
# வேதவசனம்

❤ *அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.*

*சங்கீதம் 107:20*

தேவனுடைய வசனம் நம்மைக் குணமாக்குகிறது. நம்மை அழிவுக்குத் தப்புவிக்கிறது. கூடவே, அது நம்மையும் நமது வாழ்க்கைகளையும் மாற்றுகிறது.

தேவனுடைய வசனம் உங்களை மாற்றும்!

சங்கீதம் 1:1-3ல், தாவீது, "*இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் ஆர்வமாயிருக்கிற மனிதன், நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டுள்ள மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்*" என்று எழுதினார்.

நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டுள்ள மரம் அசையாமல் உறுதியாய் நிலைநிற்கும். நீங்களும் அசையாமல்

உறுதியாய் நிலைநிற்கலாம். நீங்கள் செய்வதெல்லாங்கூட வாய்க்கும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது தேவனுடைய வசனத்தைத் தியானிப்பதே! தியானிப்பது என்றால், வசனத்தை உங்கள் மனதில் அசைபோடுவதும், அதையே மீண்டும் மீண்டும் சிந்திப்பதும், அதை உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்வதுமே ஆகும்! ஆண்டவர் யோசுவாவிடம் இதையே கட்டளையிடுகிறார்:

> ❤ *இந்த நியாயப்பிரமாண புத்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய கவனமாய் இருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டி ருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.*
>
> யோசுவா 1:8

உபாகமம் 30:14, ❤ *"நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும், உன் இதயத்திலும் இருக்கிறது" என்கிறது.*

ஏசாயா 55:11ல் தேவன் ❤ *"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."* என்று கூறுகிறார்.

2 கொரிந்தியர் 3:18ல் அப்போஸ்தலனாகிய பவுல், கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போல அவரது வசனத்திலே கண்டு, மறுரூபப்படுகிறோம் என்று சொல்கிறார். கர்த்தருடைய மகிமையைக் காண்பதில் ஒருபகுதி, அவர் நமக்காக வைத்திருக்கும் மகிமையான திட்டத்தை விசுவாசிப்பது!

தேவன் நம்மை நேசிக்கிறார், நமது வாழ்க்கைக்கென ஒரு நல்ல திட்டம், மேன்மையான திட்டம் வைத்திருக்கிறார். எபேசியர் முதலாம் அதிகாரத்தில், தேவன் நம்மீது வைத்த அளவற்ற அன்பின் நிமித்தமாகவே கிறிஸ்துவின்மூலம் நமக்கு இரட்சிப்பை உண்டாக்கும் திட்டத்தைத் தீட்டினார் என்று பவுல் எழுதியிருக்கிறார்.

தேவன் உங்களை நேசிக்கிறார், உங்களுக்கென, உங்கள் வாழ்க்கைக்கென ஒரு அற்புதமான, மாட்சிமை மிக்க திட்டத்தை வைத்திருக்கிறார். அதை நீங்கள் நம்ப வேண்டும், அறிக்கையிட வேண்டும்.

பிசாசானவன் தேவனுடைய திட்டத்தை முறியடிக்க வகை பார்க்கிறான். நீங்கள் எதற்கும் இலாயக்கற்றவர்கள் என்று உங்களை உணரவைக்க உங்கள் வாழ்நாளெல்லாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறான். ஏன்? காரணம் தேவன் உங்களை வெகுவாய் நேசிக்கிறார் என்பதை நீங்கள் நம்புவது அவனுக்கு விருப்பமில்லை. வேதவசனத்தைத் திரும்பத் திரும்பக் கேட்பதும், அதை உங்கள் உள்ளானவாழ்வின் ஒருபகுதியாக ஆக்கிக்கொள்வதும், வசனத்தால் உங்கள் மனதை நிரப்பிவிடுவதும், உங்களை

அடியோடு மாற்றிவிடும் என்பதை சாத்தான் அறிவான். அது நடந்துவிடக் கூடாது என்றே அவன் விரும்புகிறான்.

அதற்காகத்தான் நான் இந்த நூலை எழுதியுள்ளேன். நீங்கள் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்தை மாற்றக்கூடிய, அதன்மூலம் உங்கள் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் மாற்றக்கூடிய வேதவசனங்களை இங்கே தந்திருக்கிறேன்.

வேதவசனத்தின்படி, நீங்கள் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டவர்கள் (ஆதி 1:27). தேவன் உங்களைப் பற்றி என்ன சொல்கிறாரோ அதை நம்புவது, உங்களைப் பற்றிய உங்கள் கருத்தையும் மனப்பான்மையையும் மாற்றும். “என்னைப் பற்றி என்ன நினைக்கிறேன்? என்னைப் பற்றிய எனது கருத்து என்ன?” என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்! பிறகு, தேவன் “என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்? என்னைப் பற்றி அவரது கருத்து என்ன?” என்று கேளுங்கள்!

தேவன் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார், என்ன சொல்கிறார் என்பதை அவருடைய வசனத்தில் காணலாம். இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள வேதவசன அறிக்கைகள் எதிரியாவானவன் உங்களைப் பற்றி என்ன சொல்கிறான் என்பதை விடுத்து, தேவனுடன் உங்களை ஒரு உடன்பாட்டுக்குள் கொண்டுவரும். ஒருவேளை, உங்கள் வாழ்நாளெல்லாம் பிசாசு உங்களிடம் வந்து பொய்சொல்லிக்கொண்டே இருந்தால், நீங்களும் அவனை நம்பிக்கொண்டே இருந்திருப்பீர்கள். இப்பொழுதோ தேவனை நம்பவேண்டியவேளை வந்தாயிற்று.

யோவான் 17:17ல் தேவவசனமே சத்தியம் என்றும், யோவான் 8:32ல் சத்தியமே நம்மை விடுவிக்கும் என்றும் இயேசு கூறுகின்றார். தேவவசனம், சத்திய வசனம் நம்மை விடுவிப்பது மட்டுமல்ல, நம்மையும், நமது முழு தன்மையையும் மாற்றக்கூடியது. ஆகையால்தான் நாம் அதை வாசிக்க வேண்டும், கற்றுக்கொள்ள வேண்டும், தியானிக்க வேண்டும், அது நமக்குள்ளே ஊறி உரங்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் நீங்கள் நம்பிக்கை நிறைந்தவர்களாக, மகிழ்ச்சிமிக்கவர்களாக, வெற்றியில் சிறப்பவர்களாக, உண்மையுள்ளவர்களாக, தேவனுக்குச் தோழர்களாக தேவனுடைய முகத்தைத் தேடுபவர்களாக இருக்க முடியும்.

தேவன் தமது வசனத்தில் உங்களைப் பற்றி என்ன சொல்கிறாரோ அதையே உங்களைப் பற்றி அறிக்கை யிடுங்கள்! நீங்கள் அப்படிச் செய்யச்செய்ய தேவன் உங்கள் வாழ்வில் செயல்படத் தொடங்குவார். உடைந்த உள்ளம் கொண்ட, காயப்பட்ட, பயந்து நடுங்குகிற உங்களை எடுத்துத் தமக்குப் பிரியமான, தம்மை மிகவும் நேசிக்கின்ற தமது உண்மை நண்பனாக மாற்றுவார்.

ஏசாயா 61:1-3ல் இப்படி வாசிக்கிறோம்:

❤ *கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக்*

*காயம் கட்டுதலையும், (சரீரத்திலும், ஆவியிலும்) சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,*

*கர்த்தருடைய அனுக்கிரகவருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,*

*சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்தத் தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்கள் (உயர்ந்த உறுதியான, பிரம்மாண்டமான, தேவனுடைய நீதியால் நேராய் நிமிர்ந்துநிற்கிற மரங்கள்) என்னப்படுவார்கள்.*

ஆம்! தேவன் உங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் உங்கள் குணங்களை மாற்றுகிறார்! அவர் உங்கள் வாழ்க்கையை மாற்றுகின்றார்! தேவன் உங்களை நேசிக்கிறார். நீங்கள் அவருக்கு விசேஷமானவர்கள். தேவனால் நேசிக்கப் படுவதாக நீங்கள் உணருவதை சத்துருவானவன் வெறுக்கிறான். ஆனால் தேவனோ அதை விரும்புகிறார்.

இனிவரும் பக்கங்களில், தேவனுடைய அன்பின் நிச்சயத்தைப் பெறுவது எப்படி? *என்பதோடு* உங்கள் எதிர்காலம் பற்றிய நிச்சயத்தைப் பெறுவது எப்படி? உங்கள் நீதியை (அதாவது, கிறிஸ்துவில் நீங்கள் யார் என்பதை) அறிவது எப்படி? தேவன் உங்களுக்காகத் திட்டமிட்டு வைத்திருக்கும் அற்புதமான வாழ்வின் ஒருபகுதியாக அவர் உங்கள்மேல் பொழியக் காத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளவிடாமல் உங்களை ஆட்டிப் படைக்கும் பயத்தை மேற்கொள்வது எப்படி என்பதையெல்லாம் காணப்போகிறோம்.

வெறுமையாய் தேவனிடத்துக்குத் திரும்பாமல், அவர் விரும்புகிறதைச் செய்து, அவர் அதை அனுப்பின காரியத்தை வாய்க்கப்பண்ணுகிற அவருடைய வசனத்தை வாய்விட்டு அறிக்கையிட நீங்கள் கற்றுக்கொள்ள, கற்றுக்கொள்ள அவர் உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

# 1

# தேவனுடைய அன்பை அனுபவித்தல்

*❤ இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் வெற்றிகொள்ளு கிறவர்களாய் இருக்கிறோமே!*

*மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.*

ரோமர் 8:37-39

இந்த வேதபகுதியில், அப்போஸ்தலனாகிய பவுல் வாழ்க்கையில் நமக்கெதிராக என்ன வந்தாலும் சரி, நமக்காகத் தனது உயிரையும் கொடுக்குமளவிற்கு நம்மை நேசித்த கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் எதிர்கொண்டு வெற்றியில் சிறப்போம் என்று உறுதிபடக் கூறுகின்றார்.

யோவான் 3:16ல் இயேசுதாமே கூறுவதாவது: ❤ “*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*”

இவ்வுலகத்தில் நீங்கள் ஒரேயொருவராக மட்டுமே இருந்திருந்தாலும், உங்கள் ஒருவருக்காகவே தமது உயிரைக் கொடுக்குமளவிற்கு, தனிப்பட்டமுறையில், இயேசு உங்களை நேசிக்கிறார்.

இயேசுவுக்கு அன்பான சீஷர் யோவான் ❤ “*அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பிலே பூரணப்பட்டவன் அல்ல*” (1 யோவான் 4:18) என்று கூறுகிறார்.

நமது உள்ளத்திலே பயம் இருக்குமானால், அதற்கு தேவன் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளவில்லை என்பதே பொருள்.

தேவனுடைய அன்பின் அளவை நீங்கள் அறிந்திருந்தால், உங்கள் பயங்கள் எல்லாம் பனிபோல் உருகிமறையும்.

யோவான் 16:27ல் இயேசு, ❤ “*நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன்*

*என்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்"* என்கிறார்.

தேவன் உங்களைப் பற்றி இவ்வளவு அக்கறையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நம்ப உங்களுக்குக் கடினமாக இருக்கிறதா?

பல ஆண்டுகளாக நான் தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்ள முடியாதவளாக இருந்தேன். காரணம் நான் அதற்குத் தகுதியானவளாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுதோ, என்னிடம் எவ்வளவோ குற்றங்குறைகள் இருந்தாலுங்கூட அவர் என்னை நேசிக்கிறார் என்பதை அறிந்திருக்கிறேன்.

யோவான் 14:21ல், இயேசு ❤"*என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு, அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்; என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்"* என்று கூறுகிறார்.

இயேசு தம்மை உங்களுக்கு உண்மையென வெளிப்படுத்திக்காட்ட விரும்புகிறார்.

கீழ்ப்படிதல் என்பது உண்மையான அன்பின் கனியாகும். ஆனால் முதலாவது, தேவன் உங்கள்மீது வைத்துள்ள அன்பை நீங்கள் புரிந்துகொள்ளாத மற்றும் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், அவருக்குக் கீழ்ப்படியும் அளவிற்கு அவரை நேசிப்பது என்பது முடியாத காரியமாகும். மேலும், அவருடைய அன்பை நீங்கள்

வேறெங்கும் சம்பாதிக்கவும் முடியாது; நற்செயல்களால் அவரின் அன்பை கவரவும் முடியாது; உங்கள் நன்நடத்தையினால் *நற்கிரியைகளினால்* அதை விலைகொடுத்து வாங்கவும் முடியாது.

தேவ அன்பு இலவச அன்பளிப்பாகும்; அது நிபந்தனையற்றது. இயேசு சிலுவையிலே நமக்காக உயிர்நீத்தபோது செலுத்திய தியாகபலியினால் அது நமக்கு இலவசமாகக் கிடைக்கின்றது.

தேவனுடைய அன்பை இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்! அவருடைய சமுகத்தில் அமர்ந்து, "ஆண்டவரே, நீர் என்னை நேசிக்கிறீர் என்பதை நம்புகிறேன்! உம்முடைய அன்பை ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லுங்கள்!

1 யோவான் 4:19ல், ❤"*அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்*" என்று வாசிக்கிறோம். ஒருவேளை, பல ஆண்டுகளாக நான் செய்துவந்ததுபோல நீங்களும் இதைத் தலைகீழாக யோசித்துக்கொண்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் தேவனைப் போதுமானளவு நேசிக்கவும், அவருக்காக எதையாவது செய்யவும் முயன்று, அதன்மூலம், உங்கள் அன்பிற்குப் பதிலாக அவர் உங்களை நேசிக்கச்செய்யும்படி முயன்று கொண்டிருக்கலாம். ஆனால் 1 யோவான் 4:19ஐ மீண்டும் பாருங்கள். ❤"*அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்த படியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.*"

தாவீது தேவனுடைய அன்பைப் பற்றி நிச்சயம் கொண்டிருந்தார். ஆகவேதான் சங்கீதம் 36:7ல், ❤"*தேவனே உம்முடைய கிருபை (மாறாத அன்பு) எவ்வளவு அருமையானது! அதனால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்*" என்று எழுதுகிறார்.

சங்கீதம் 139லிருந்து சில வசனங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தேவனோடு பேசுவதற்கு தாவீதுக்கே உரித்தான ஒரு முறை இருந்தது. நாமும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவது நலம் தரும். இந்தச் சங்கீதத்தின் சொற்களை வாய்விட்டுச் சொல்லுங்கள்:

> ❤*கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்! என் உட்காருதலையும், என் எழுந்திருத்தலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்; நான் நடந்தாலும், படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே இதோ, கர்த்தாவே! அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்! முற்புறத்திலும், பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமதுகரத்தை என்மேல் வைக்கிறீர்!*
>
> *இந்த அறிவு எனக்கு மிகுந்த வியப்பும், எனக்கு எட்டாத உயரமுமாய் இருக்கிறது. உம்முடைய*

*ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?...*

*தேவனே! உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப் பார்க்கிலும் அதிகமாம்; நான் காலையில் கண்விழிக்கும்போதும் நீர் அண்டையில் இருக்கிறீர்!.*

சங்கீதம் 139:1-7,17,18

இது எவ்வளவு மகத்துவமான காரியம்!

ஏசாயா தீர்க்கதரிசி, தேவன் நமக்கு நன்மை செய்யக்காத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார் ❤ *"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் (ஆவலுடன்) காத்திருப்பார் (எதிர்பார்த்திருப்பார், கவனித்திருப்பார், ஏங்கியிருப்பார்); உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் (அவரது வெற்றிக்கு, தயவுக்கு, அன்புக்கு, சமாதானத்துக்கு, மகிழ்ச்சிக்கு, அவருடைய ஒப்பற்ற, இடையறாத ஐக்கியத்துக்கு) காத்திருக்கிற (எதிர்பார்த்திருக்கிற, கவனித்திருக்கிற, ஏங்கிநிற்கிற) அனைவரும் பாக்கியவான்கள்"* (ஏசாயா 30:18).

இதை யோசித்துப் பாருங்கள்! தேவன் உங்களை நேசிப்பதால், நீங்கள் அவருக்கு சிறப்பானவர்கள் என்பதால் உங்களோடு நேரம்செலவிட விரும்புகிறார்.

தேவன் உங்களை வெகுவாக நேசிப்பதால், உங்கள் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறார் உங்கள் கண்ணீரை அவருடைய துருத்தியில் வைத்து, அவை அவருடையக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. (சங்கீதம் 56:8)

யோவான் 14:18ல் இயேசு தமது சீஷர்களிடம் ❤“*நான் உங்களைத் திக்கற்றவர்களாக (ஆதரவற்றவர்களாக, அனாதைகளாக, துயருற்றவர்களாக, கைவிடப்பட்டவர்களாக) விடேன். உங்களிடத்தில் (மீண்டும்) வருவேன்*” என்று சொன்னார்.

சங்கீதம் 27:10ல் தாவீது ❤“*என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் (தமது பிள்ளையாக) சேர்த்துக்கொள்வார்*” என்கிறார்.

இயல்பாக மனிதர்கள் நாடித்தேடும் எந்த அன்பும் ஒருவேளை உங்களுக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம்; ஒருவேளை உங்கள் சொந்தக் குடும்பமுங்கூட உங்களை உதறித்தள்ளியிருக்கலாம். யாருடைய அன்பும் இல்லையெனினும் அந்த இழப்பையெல்லாம் ஈடுகட்டக்கூடிய அவ்வளவு வல்லமையான, பெரிதான, மகத்தான அன்பை தேவன் உங்கள்மீது வைத்திருக்கிறார் என்பதை இன்று நீங்கள் அறிய விரும்புகிறார். அவரே உங்களை ஆற்றித்தேற்றவும், உங்களது உடைந்த உள்ளத்தைக் குணமாக்கவும் *அனுமதியுங்கள்.*

நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் அவருடைய பிள்ளை, அவர் உங்களை நேசிக்கிறார்.

எபேசியர் 3:17-19ல் அப்போஸ்தலனாகிய பவுல் உங்களுக்காகவும், எனக்காகவும் இப்படி ஜெபிக்கிறார்:

*❤விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இதயங்களில் வாசமாயிருக்கவும் (வசிக்க, நிலைத்திருக்க, நிரந்தரவீடாகக் கொள்ள), நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி,*

*சகல பரிசுத்தாவன்களோடுங்கூட (தேவனுடைய, அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள்) கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து (அந்த அன்பை அனுபவித்து);*

*அறிவுக்கெட்டாத (அறிவால் மட்டும் அறிந்துகொள்ளப்பட முடியாத) அந்த அன்பை அறிந்து கொள்ள (நடைமுறையில், அனுபவத்தில்) வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் (அவருடைய தெய்வீகப் பிரசன்னத்தின் நிறைவை அடையவும், தேவனாலேயே நிரப்பப்பட்ட, நிரம்பி வழிந்தோடுகிற சரீரமாக மாறவும்) அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.*

ஆம்! தேவன் உங்களை நேசிக்கிறார்! உங்களைக் காத்து வருகிறார். தமது கண்களை உங்கள் மீதே பதித்திருக்கிறார்.

அவர் தமது உள்ளங்கையில் நம்மை வரைந்து வைத்திருக்கிறார்! என்று ஏசாயா 49:16 கூறுகின்றது.

யோவான் 15:9 இல் இயேசு ❤"*பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல, நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்!*" என்று சொல்கிறார்.

தேவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறார்?

> ❤"*ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு* ஒருவரிடத்திலும் இல்லை."
>
> யோவான் 15:13

இதைவிட அதிகமாக யாரும் உங்களை நேசிக்க முடியாது.

இயேசு உங்கள் நண்பராக இருக்க விரும்புகிறார். தாம் உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதைக் காட்டுவதற்காகவே அவர் உங்களுக்காக மரித்தார்.

ரோமர் 5:6 இல் பவுல் கூறுவதாவது ❤"*அன்றியும், நாம் பெலனற்றவர்களாய் (நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள இயலாதவர்களாய்) இருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக் காரருக்காக (அக்கிரமக்காரருக்குப் பதிலாக) மரித்தார்.*"

சரியானவேளையில், நாம் இன்னும் பாவிகளாய் இருக்கும்போதே நமக்காக மரிக்கக் கிறிஸ்துவை அனுப்பி

வைத்ததன்மூலம் தேவன் நம்மீது வைத்திருக்கும் தமது அன்பை விளக்கிக் காட்டினார்.

வசனம் 7ல் பவுல் மேலும் சொல்கிறார்: ❤*"நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்."*

இறுதியாக வசனம் 8ல் பவுல் முடிவாகக் கூறுவதாவது: ❤*"நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து (மேசியா, அபிஷேகிக்கப்பட்டவர்) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (காட்டுகிறார், நிரூபிக்கிறார்)."*

ஓ! என் நண்பர்களே! தேவன் உங்களை மிகமிக நேசிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய அன்பை உங்களுக்கு வெளிப்படுத்தத் துடிக்கிறார். உங்கள் உள்ளத்தைத் திறந்து தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்! நீங்கள் இருக்கிற இடத்திலேயே, இருக்கிற வண்ணமாகவே அவர் உங்களை ஏற்றுக்கொள்கிறார். அவர் உங்களை ஒருபோதும் தள்ளிவிடமாட்டார், ஒருபோதும் குற்றவாளி என்று தீர்க்கமாட்டார் (யோவான் 3:18).

எபேசியர் 1:6ல் பவுல், பிரியமானவருக்குள் (கிறிஸ்து இயேசுவுக்குள்), நாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம் என்று எழுதுகிறார். நாம் குறைவற்ற பூரணர்களாய் இருப்பதற்கு முயற்சிப்பதால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. கிறிஸ்துவின்

மூலமாக மட்டுமே நாம் பிதாவின் அருகில் நெருங்கிச் சேருமளவிற்கு நீதிமான்களாக்கப்படுகிறோம்.

எபேசியர் 1:7 தொடர்ந்து கூறுகிறது: ❤"*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய (குமாரனுடைய) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*"

ஏசாயா 54:10ல், ❤"*மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டுவிலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்*" என்று வாசிக்கிறோம்.

1 கொரிந்தியர் 1:9ல் பவுல் ❤"*தேவன் உண்மையுள்ளவர் (நம்பகமானவர், வாக்குமாறாதவர்)*" என்று நினைவூட்டுகிறார். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பீர்களானால் உங்களைப் புறம்பே தள்ள மாட்டேன் என்று அவர் வாக்குக்கொடுத்துள்ளார். அவர் உங்களை நேசிப்பேன் என்றும் வாக்கருளியுள்ளார். அவர்தம் வாக்கைக் காப்பவர்.

*யோவான் 17:9,10ல் நீங்கள் இயேசுவுக்கு சொந்தமானவர்களாக இருப்பதால் அவர் உங்களுக்காக ஜெபிக்கிறாரென்று இயேசு தாமே கூறுகிறார். தேவனால் நீங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டவர்கள், உங்களில் அவர் மகிமைப்படுகிறார்.*

தேவன் உங்களை நேசிக்கிறார். அந்த அன்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

சங்கீதக்காரனாகிய தாவீதுடன் சோந்து அறிக்கை செய்யுங்கள்:

❤ *என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி! என் முழு உள்ளமே! அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி!*

*என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி! அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!*

*அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களை எல்லாம் குணமாக்கி,*

*உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி,*

*நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது.*

சங்கீதம் 103:1-4

கர்த்தரைப் பற்றித் தாவீது 5, 6, 8, 11-13, 17 ஆகிய வசனங்களில் கூறுவதைத் தொடர்ந்து கவனியுங்கள்:

❤ *ஒடுக்கப்படுகிற யாவருக்கும் கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்...*

*கர்த்தர் (தகுதியற்றவர்களிடம்) உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபம் கொண்டிரார் ... பூமிக்கு வானம்*

*எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டுவிலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்...*

*கர்த்தருடைய கிருபையோ (அன்போ) அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது...*

மேலும் சங்கீதம் 32:10ல் தாவீது ❤ *"...கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை (அவருடைய மாறாத அன்பு) சூழ்ந்துகொள்ளும்"* என்று சொல்கிறார். சங்கீதம் 34:1-8ல் அவர் எழுதுகிறார்:

❤ *கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக!*

*நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை*

*நோக்கிப் பார்த்துப் பிரகாசம் அடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.*

*கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

பேதுரு, "*அன்பு திரளான பாவங்களை மூடும்!*" *என்கிறார் (1 பேதுரு 4:8). தேவனுடைய அன்பு உங்களை மூடியிருக்கிறது. அந்த அன்பிற்குள் மறைந்துவாழுங்கள்! அது உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதிக்கட்டும்! "தேவன் என்னை நேசிக்கிறார்"* என்று ஒவ்வொரு நாளிலும் பலமுறை வாய்விட்டுச்சொல்லுங்கள்!

இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள வசனங்களைத் தியானியுங்கள்! நீங்கள் செய்யும் இந்தக் கீழ்ப்படிதலின் செயல், தேவன் உங்களுக்குத் தரவேண்டும் என்று விரும்புகிறதை (அவருடைய அளவற்ற, மாறாத அன்பின் நிச்சயத்தை) நீங்கள் பெற்றுக் கொள்ள உதவும்.

# 2
# உங்கள் எதிர்காலத்தின் நிச்சயம்

இப்பொழுது, தேவன் உங்களுக்காகத் திட்டமிட்டு வைத்துள்ள மாட்சிமிகு எதிர்காலத்தைப்பற்றிய சில வேதவசனங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகின்றேன். நீங்கள் விலையேறப்பெற்றவர் என்றும், தேவன் உங்களை உருவாக்கினபோது ஒரு விசேஷித்த நோக்கத்துடனே உருவாக்கினார் என்றும் நீங்கள் அறிய விரும்புகிறேன்.

"I Have a Destiny" (எனக்கொரு எதிர்காலம் உண்டு), என்ற ஆங்கிலப் பாடலை இயற்றியவர், தனக்கு ஒரு எதிர்காலம் உண்டு எனவும், அதைத் தான் அடைவது நிச்சயம் எனவும், அது தன்னைத் தெரிந்துகொண்டு, தமது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் தனக்குள் பலமான கிரியை நடப்பிக்கிற தேவனால் தனக்கு முன்குறித்து வைக்கப்பட்டது எனவும் பாடுகிறார். பாடலின் முடிவில், எனக்கொரு

எதிர்காலம் உண்டு, அது வெறும் கனவு அல்ல, அது நனவாகும் நேரம் வரும், அந்த நேரத்துக்காக, அந்த நேரத்துக்காகவே நான் பிறந்தேன் என்று அழகாக அறிக்கையிடுகிறார்.

உங்களைப் பற்றி என்ன? உங்கள் எதிர்காலத்தை நீங்கள் எவ்வண்ணமாகக் காண்கிறீர்கள்?

தேவன் நீங்கள் நம்பிக்கை நிறைந்தவராக இருக்க விரும்புகிறார். பிசாசோ உங்களை நம்பிக்கையற்றவராகக் காண விரும்புகிறான். ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்வில் நன்மையான காரியங்களை நீங்கள் எதிர்பார்க்க வேண்டும் என்பது தேவனின் விருப்பம்! பிசாசோ நீங்கள் அழிவையும் நாசத்தையுமே எதிர்பார்க்கும்படி விரும்புகிறான்.

நீதிமொழிகள் 15:15 ❤ "*சிறுமைப்பட்டவனுடைய (கவலையும், கலக்கமும் கொண்டவனின்) நாட்கள் எல்லாம் தீங்குள்ளவைகள்; மனரம்மியமோ (சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும்) நித்திய விருந்து*" என்று கூறுகின்றது.

கலக்கம் என்பது தீமை வருமுன்னரே தீமை வந்து விடுமோ என்று எண்ணியெண்ணிக் கலங்குவதாகும். இவ்விதமான எண்ணங்களே, கடைசியில் நமது வாழ்க்கை கண்ணீரில் முடிவடைய வழிவகுக்கின்றன என்று வேதவசனங்கள் தெளிவுபடக் கூறுகின்றன.

சங்கீதம் 27:13ல் தாவீது ❤ "*நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்*" என்று எழுதுகிறார். அடுத்த வசனத்தில் "*கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இதயத்தை திடப்படுத்துவார்; திடமனதாய் இருந்து*

*கர்த்தருக்கே காத்திரு"* என்று நமக்கு ஆலோசனையும் தருகின்றார்.

எரேமியா 29:11ல் ஆண்டவர் நமக்காகத் தாம் கொண்டிருக்கும் நோக்கங்களை, எண்ணங்களை வெளிப்படுத்துகிறார்: ❤ *"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கு ஏதுவான நினைவுகளே."*

நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் நம்பிக்கையற்றவர்களாக இருக்க பிசாசானவன் விரும்புகிறான். நீங்கள் நம்பிக்கையற்றவர்களாகக் காட்சியளிக்க, நம்பிக்கையற்றவர்களாக யோசிக்க, நம்பிக்கையற்றவர்களாகப் பேச, நம்பிக்கை அற்றவர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்பதே அவனது ஆவல்.

ஆனால் சங்கீதம் 42:11ல் தாவீது எழுதிவைத்துள்ள இவ்வல்லமை மிக்க சொற்களைக் கவனியுங்கள்: ❤ *"என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும், என் தேவனுமாய் இருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்."*

இப்படிப்பட்ட வசனங்களை உங்கள் மனதில் பதித்துவைப்பது, நீங்கள் நம்பிக்கையுடனும், மகிழ்ச்சி நிறைந்த எதிர்பார்ப்புடனும் இருக்க உதவும். நீங்கள் நம்பிக்கையுடன் தோற்றமளிப்பீர்கள்! நம்பிக்கையுடன் யோசிப்பீர்கள்!

நம்பிக்கையுடன் பேசுவீர்கள்! நம்பிக்கையுடன் நடந்துகொள்வீர்கள்!

ரோமர் 5:5ல் அப்போஸ்தலனாகிய பவுல், ❤“*மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.*” என்று சொல்கிறார்.

வேறுவிதமாகச் சொல்வோமானால், தேவன் நம்மை நேசிக்கிறார் என்று நாம் அறிந்திருக்கக் காரணம், பரிசுத்த ஆவியானவர் நமக்கு அப்படிக் கற்பிப்பதே! தேவன் நம்மை நேசிக்கிறார், நமக்கென்று ஒரு மேன்மையான எதிர்காலத்தைத் திட்டமிட்டு வைத்திருக்கிறார் என்று நாம் நிச்சயமாய் அறிந்திருப்பதால் அவர்மீது நமது நம்பிக்கையை வைத்திருக்கிறோம். நமது நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் அவரில் வைக்கப்படும்போது முடிவில் நாம் ஏமாறவோ, ஏமாற்றப்படவோ, வெட்கமடையவோ மாட்டோம்.

*சங்கீதம் 84:11ல் “தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும், மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.”*

பிலிப்பியர் 1:5,6ல் பவுல் ❤“*உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்வரைக்கும் முடிய நடத்திவருவார் என்று நம்பி ...என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்*” என்று உறுதிகூறுகின்றார்.

இந்த நிச்சயத்துக்குக் காரணத்தை அவர் எபேசியர் 2:10ல் விளக்குகின்றார்

❤ *ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் உருவாக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.*

தேவன் எனக்கென்று இவ்வளவு நல்லதிட்டத்தை வைத்திருப்பார் என்றால், நான் அதைக் காண்பது எப்போது? என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம்.

அதற்குப் பதில் பிரசங்கி 3:17ல் இருக்கிறது: ❤ *"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலம் உண்டு; வானத்தின்கீழ் இருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயம் உண்டு."*

தேவன் அவருடைய வேளையில், உங்களுக்காக வைத்திருக்கிற திட்டத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவார். இதில் உங்களுடைய பங்கு, பேதுரு சொல்வதைப்போல, ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்பதே! (1 பேதுரு 5:6)

ஆபகூக் 2:2ல் ஆண்டவர், தீர்க்கதரிசிக்கு எதிர்காலத்தைப் பற்றிய ஒரு தரிசனத்தைக் காண்பித்து, மற்றவர்கள் வாசிக்கும்படியாக அதை ஒரு பலகையிலே எழுதிவைக்கும்படி சொன்னார். ஆனால் அடுத்த வசனத்திலே

அவர் தொடர்ந்து கூறுவதைப் பாருங்கள்: ❤ *"குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது (அது உடனே வராது); (கொஞ்சம் கொஞ்சமாக வந்து) முடிவிலே அது விளங்கும், அது பொய்சொல்லாது (நிச்சயமாய் நிறைவேறும்); அது தாமதித்தாலும் (தாமதிப்பதுபோல் தோன்றினாலும், மனம் தளராமல்) அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை (குறித்தநாளுக்கு ஒரு நாள் கூடப் பிந்தாது)."* (ஆபகூக் 2:3)

எபிரெயர் நிருபத்தை எழுதியவர் எபிரெயர் 6:18,19ல் ❤ *"நமக்குமுன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதல் உண்டாகும் படிக்கு எவ்வளவேனும் பொய் உரையாத தேவன்"* இவற்றையெல்லாம் எழுதிவைத்திருக்கிறார் என்று கூறுகிறார். ❤ *"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும், உறுதியும் திரைக்கு உள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாய் இருக்கிறது"* என்றும் சொல்கிறார்.

பவுல் ❤ *"அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூரு கிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது"* என்கிறார் (ரோமர் 8:28). பின்னர், எபேசு சபைக்கு எழுதிய நிருபத்தில், ❤ *"நாம் வேண்டிக்கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவர்"* (எபேசியர் 3:20) என்று எழுதுகிறார்.

நீங்கள் நினைப்பதும், கனவுகாண்பதும் மட்டுமன்றி அவற்றுக்கும் அப்பாற்பட்ட பெரிய காரியங்களைச் செய்ய தேவன் ஆவலுள்ளவராய் இருக்கிறார். ஆகவே, நீங்கள் நம்பிக்கையுடன் இருக்க விரும்புகிறார். எனினும் பிசாசு விரும்புவது போல நீங்கள் நம்பிக்கை அற்றவர்களாக இருந்தால், அப்பொழுது தேவன் உங்களைச் செய்யச்சொன்ன உங்கள் பங்கை நீங்கள் நிறைவேற்றவில்லை என்றுதான் அர்த்தம்.

தேவன் உங்களிடம் கேட்பதெல்லாம், உங்கள் எதிர்காலத்திற்காக அவர் நல்ல திட்டம் வைத்திருக்கிறார் என்று நம்பி, அந்தத் திட்டம் மெல்ல மெல்ல நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்று விசுவாசித்தவர்களாய் உங்கள் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அவரில் வைக்க வேண்டும் என்பதே!

எபேசியர் 1:11ல் பவுல் இயேசு கிறிஸ்துவைப் பற்றி, ❤ "*தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின் படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய (தேவனுடைய) சுதந்திரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்*" என்று எழுதுகிறார்.

யோசுவா 1:8ல் தேவன் யோசுவாவுக்கு இட்ட கட்டளையை நினைத்துப் பாருங்கள்: ❤ "*இந்த நியாயப் பிரமாண புத்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாய் இருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன்*

*வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.”*

மேலும், உபாகமம் 30:14ல் ❤ “*நீ அந்த வார்த்தையின் படியே செய்யும்பொருட்டு அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும், உன் இதயத்திலும் இருக்கிறது*” என்று கூறுவதையும் நினைவில் கொள்ளுங்கள்!

ஏசாயா 55:11ல் அவருடைய வசனத்தை நாம் ஒப்புக்கொள்வது நமது வாழ்வில் அவரது நோக்கங்களை நிறைவேற்ற எப்படி உதவும் என்பதை தேவன் எடுத்துக்கூறுகிறார். ❤ “*அப்படியே என் வாயிலிருந்து புறப்படுகிற வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியம் ஆகும்படி வாய்க்கும்.”*

உங்கள் வாயைத் தேவனிடம் கொடுங்கள்! அது அவருடைய வாயாகும்படி விடுங்கள்! அவருடைய வசனத்தைப் பேசத்தொடங்குயுங்கள்!

ஏனெனில் அவர் உங்களுக்கென்று ஒரு வளமான வருங்காலத்தை, ஒரு நல்ல நோக்கத்தை, ஒரு அருமையான திட்டத்தை வைத்திருக்கிறார். எதிரியானவனுடன் அல்ல, தேவனுடன் உடன்படுங்கள்!

நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தெய்வீக எதிர்காலத் திட்டம் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள்.

எதிர்காலத்தில் நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் போகப்போக இன்னும் மோசமாகிவிடுவீர்கள் என்று நினைக்கும்படி பிசாசு

விரும்புகிறான். நீங்கள் எதுவரை வந்திருக்கிறீர்கள் என்பதைப் பார்ப்பதை விட்டுவிட்டு, இன்னும் எவ்வளவு தொலைவு செல்ல வேண்டும் என்பதிலேயே கவனமாயிருக்கும்படி அவன் செய்கிறான்.

நான் ஒருநாளும் மாறவே போவதில்லை என்று நினைத்து, உங்களையே சலித்துக்கொள்கிறீர்களா? நம்பிக்கையோடு இருங்கள்! தேவன் உங்களை மாற்றிக் கொண்டே இருக்கிறார். அவருடைய வசனம் உங்களில் வல்லமையாகக் கிரியை செய்கிறது.

உபாகமம் 7:22, நாம் நமது எதிரிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக விரட்டிவிட அவர் உதவுவார் என்கிறது.

2 கொரிந்தியர் 3:18ல் பவுல் நாம் கர்த்தருடைய வசனத்தில் அவரைக் காணக் காண அந்தச் சாயலாகவே ❤“*மகிமையின்மேல் மகிமையடைந்து*” உருமாற்றம் அடைகிறோம் என்கிறார்.

பிறகு ரோமர் 12:2ல், இந்த விதமான புதிய எண்ணங்கள், இலட்சியங்கள், மனப்பான்மைகளால் நமது முழுமனதும் உருமாற்றம் அடைகிறது, அதனால் ❤“*தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கவர்களாகிறோம்*” என்று வாசிக்கிறோம்.

கொலோசெயர் 1:27ல், பவுல் கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பதே, பண்டையகாலங்களுக்கும், பல தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது வெளியாக்கப்பட்ட இரகசியம் என்கிறார். உங்கள் பரமபிதா உங்களை மகிமை

அடைந்தவர்களாகக் காண்கிறார். அப்படி நீங்கள் மகிமை அடைவதை உறுதிசெய்யும்பொருட்டே தமது பரிசுத்த ஆவியானவரை உங்களுக்குள் வாசமாயிருக்கும்படி அனுப்பியிருக்கிறார்.

நான் பொதுவாக "*மகிமை*" என்ற பதத்தை, நமது தேவனின் அதியுன்னத குணாதிசயங்கள் அனைத்தின் மொத்த வெளிப்பாடு என்று வரையறுப்பதுண்டு. உங்கள் நம்பிக்கையை அவரில் வையுங்கள்! இந்த வேதவசனங்கள் எல்லாம் உங்களுக்கே உரியவை என்று நம்புங்கள்!

நேர்மறையான, விசுவாசம் நிறைந்த, வசன அடிப்படையிலான அறிக்கைகள் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். "*நான் மகிமையின்மேல் மகிமை அடைந்து தேவனுடைய சாயலாக மாற்றப்பட்டு வருகிறேன்.*" (2 கொரி. 3:18) "கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக எனக்குள் இருக்கிறார். தேவ ஆவியானவர் அனுதினமும் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவருகிறார். என் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் உண்டு. தேவன் எனக்கென்று ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார்" என்று வாய்விட்டுச் சத்தமாகச் சொல்லுங்கள்!

ரோமர் 4:17 சொல்வது போல, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல "அழைக்கின்ற" ஒரு தேவனை நாம் சேவிக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்.

இதைப் பற்றி தேவன் தமது வசனத்தில் கூறுவது என்ன?

❤ *நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு*

*வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

1 பேதுரு 2:9

தேவன் உங்களுக்காகத் திட்டமிட்டுவைத்துள்ள ஆச்சரியமான செய்கைகளையும், நற்பண்புகளையும் அவை வெளிப்படையாகத் தெரியும்படி எடுத்துக்காட்ட விரும்புகிறார்.

“நான் இருளிலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டேன்” என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்!

நம்மைப்பற்றி எண்ண வேண்டியதைவிடத் தாழ்வாக எண்ணுவது இருளில் இருப்பதாகும். நம்மை நாமே நேசிக்க முடியாததும் இருளே! நாம் எதற்கும் இலாயக்கற்றவர்கள் என்று நினைப்பதும் இருள்தான்.

மல்கியா 3:17லிருந்து, நாம் தேவனுடைய சம்பத்து, சிறப்பான சொத்து, அவருடைய சிறந்த புதையல் என்று அறிந்து கொள்கிறோம். ஆம்! நீங்கள் விலையேறப் பெற்றவர்கள்... உங்களுக்கு ஒரு நோக்கமுண்டு. உங்களுக்கு ஒரு எதிர்காலமுண்டு. தேவன் உங்கள் வாழ்க்கைக்கென ஒரு உன்னதமான திட்டம் வைத்துள்ளார். வரலாற்றில் உங்களுக்கென்று ஒரு பங்கு உண்டு, ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும்.

ஒருவேளை நீங்கள் “ஆனால் ஜாய்ஸ்! நான் பலமுறை தோற்றுப்போனவன். எத்தனையோ தவறுகளைச் செய்திருக்கிறேன். தேவனுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறேன்” என்று சொல்லலாம்.

பிலிப்பியர் 3:13,14ல் பவுல், தான் இன்னும் பூரணமடையவில்லை என்று சொல்லிவிட்டு, கூடவே தான் தொடர்ந்து மனந்தளராமல் முன்செல்லப் போவதாகவும் கூறுகிறார்.

> ❤ *சகோதரரே! அதைப் பிடித்துக் கொண்டேன் என்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.*

தேவன் உங்கள் வாழ்விற்கென்று ஒரு சிறந்த திட்டத்தை வைத்திருக்கிறார். கடந்த காலத்திலேயே வாழாதீர்கள். ஏசாயா 43:18,19ல் அடங்கியுள்ள கர்த்தருடைய வசனங்களைக் கேளுங்கள்:

> ❤ *முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.*
>
> *இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.*

இறுதியாக, ஏசாயா 43:25ல் தேவன் உங்களுக்குச் சொல்வதைக் கவனியுங்கள்: ❤"*நான், நானே உன் மீறுதல்களை என்நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன்: உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்.*"

தேவன் நீங்கள் எப்படியானவராக மாற திட்டமிட்டிருந்தாரோ அப்படியாக மாறுவதைக் காணக் காத்திருக்கிறார். அவர் உங்களுக்காக ஏற்படுத்தி வைத்துள்ள நல்ல வாழ்க்கையை நீங்கள் முழுமையாக அனுபவிப்பதைப் பார்க்க அவர் ஆவலாயிருக்கிறார். நீங்கள் கடந்த காலத்தில் இழைத்த எல்லாத் தவறுகளையும், பாவங்களையும் தமது கிருபையினாலும், இரக்கத்தினாலும் முற்றிலுமாக அகற்றிப்போட வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார். நீங்கள் எதிர்காலத்தில் செய்யப்போகும் பிழைகளுக்கும் ஏற்கனவே ஒரு வழியை ஆயத்தம் பண்ணிவைத்துவிட்டார்.

கடந்த காலத்தைப் பற்றிய வருத்தத்துடனோ, எதிர்காலத்தைப் பற்றிய கலக்கத்துடனோ நீங்கள் வாழ வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு எந்த விதத்தில் உதவி தேவைப்பட்டாலும் அதைச் செய்ய தேவன் மனதுள்ளவராய் இருக்கிறார்.

ஏசாயா 40:31 ❤"*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ (எதிர்பார்த்திருக்கிறவர்கள், நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள்) புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து (மேலே, தேவனுக்கு நெருக்கமாக) எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்*" என்று உறுதியளிக்கிறது.

தேவனுடைய மாறாத அன்பைப் பற்றிய, வருங்காலங்களில் நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய எந்தத் தேவைக்கும் போதுமான அவருடைய அற்புதமான பராமரிப்பைப் பற்றிய எவ்வளவு அருமையான உறுதி இது, இல்லையா?

அவருடைய ஆச்சரியமான வாக்குத் தத்தங்களையும், அவருடைய அருமையான திட்டங்களையும் பக்கபலமாக்கிக்கொண்டவர்களாக, தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று முழுநிச்சயமாய் நம்பியவர்களாக, நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் வருங்காலத்தை எதிர்கொள்ளுங்கள்! (ரோமர் 4:21)

பின்னாகத் திரும்பிப்பார்க்க வேண்டாம்! முன்னே பாருங்கள்! விசுவாசத்தில் காலடியெடுத்து வையுங்கள்!

நினைவில் இருக்கட்டும்...

நீங்கள் நிறைவேற்ற வேண்டிய தெய்வீக எதிர்காலத் திட்டம் ஒன்று உண்டு!

# 3
# கிறிஸ்துவில் உங்கள் நீதியை அறிதல்

இப்பொழுது நான், நீதியைப் பற்றிய சில வேதவசனங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

"நான் தேவனுடைய நீதியாக்கப்பட்டேன்" (I Have Been Made the Righteousness Of God) என்ற பாடலானது, தேவனுடைய குடும்பத்தின் சொந்தப்பிள்ளையாக ஏற்றுக்கொள்ளப்படுவது, அவருடைய இராஜ குடும்பத்தின் அங்கமாக அவரது சிங்காசனத்தின் முன் நிற்பது, இயேசுவில் முழுமையாக்கப்பட்டு, அவரோடு உடன்பங்காளியாக அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்டுப் பாவமின்றி இருப்பது ஆகியவை பற்றிக் கூறுகின்றது.

பவுல், 2 கொரிந்தியர் 5:21ல் கூறுவதுபோல, நீங்கள் கிறிஸ்துவுக்குள் தேவநீதியானீர்கள்: ❤"*நாம் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தேவனுடைய நீதி (தேவனுக்கு முன்பாக*

*நாம் இருக்க வேண்டிய பிரகாரம், தேவனால் அங்கீகரிக்கப்படுதல், ஏற்றுக்கொள்ளப்படுதல் அவருக்கு முன்பாகச் சரியான உறவில் வருதல்) ஆகும்படிக்கு (அணிவிக்கப்படும்படி, காணப்படும்படி) பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."*

சங்கீதம் 48:10 ஆண்டவரைப் பற்றிக் கூறுவதாவது: ❤*"தேவனே, உமது நாமம் விளங்குகிறது போல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தமும் விளங்குகிறது; உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது."*

ஆண்டவருடைய கரம் நீதியால் நிறைந்ததாய் உங்களை நோக்கி நீட்டப்பட்டிருக்கிறது.

1 கொரிந்தியர் 1:8ல் அப்போஸ்தலனாகிய பவுல், ❤*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் இருக்கும்படி முடிவு வரையிலும் அவர் உங்களை திடப்படுத்துவார்"* என்கிறார்.

அதன் பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அதாவது, தேவன் உங்களை இப்பொழுதே குற்றமற்றவர்களாக, முடிவில் குற்றஞ்சுமத்தப்பட முடியாதவர்களாகக் காண்கிறார் என்று அர்த்தம். இன்றைக்கும், நீங்கள் சரியாக எந்த இடத்தில் இருக்க விரும்புகிறாரோ அந்த இடத்தில்தான் வைத்துள்ளார். சகோதரர்களைக் குற்றஞ்சுமத்துபவனாகிய சாத்தானின் பொய்களுக்கு உங்களை விலக்கிப் பாதுகாக்கும்படி உங்கள் அருகிலேயே நிற்கிறார். (*வெளி 12:10*)

நீங்கள் இயேசு கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை வைத்திருப்பீர்களானால், தேவன் உங்களைக்

குற்றமற்றவர்களாகக் காண்கிறார். உங்கள் குற்றமின்மையை நிரூபித்துக்காட்டவும் ஆயத்தமாய் இருக்கிறார்.

மலைப் பிரசங்கத்தில் இயேசு உபதேசித்ததாவது:

❤"*நீதியின்மேல் (தேவனுக்கு முன்பாக நீதிமான்களாகக் காணப்பட) பசி, தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் (பாக்கியம் பெற்றவர்கள், மகிழ்ச்சி உடையவர்கள், ஆவியில் செழிப்படைந்தவர்கள் அதாவது மறுபடியும் பிறந்த ஒரு தேவபிள்ளை அவருடைய தயவையும், இரட்சிப்பையும் அனுபவிக்கும் நிலையிலுள்ள) அவர்கள் திருப்தியடைவார்கள்.*" (மத்தேயு 5:6)

இயேசுவைப் பொறுத்தவரை, மறுபடியும் பிறந்த ஒரு தேவபிள்ளையாக நீங்கள் தேவதயவை அனுபவிக்கக்கூடிய நிலையில் வாழும் உரிமை பெற்றவர்கள். வாழ்க்கையைப் பூரணமாய் அனுபவிக்கக் கூடிய பாக்கியம் உங்களுக்குண்டு. அது தேவன் உங்களுக்கு வழங்கும் அன்பளிப்பு.

"*நான் இயேசு கிறிஸ்துவில் தேவனுடைய நீதியாய் இருக்கிறேன்*" என்று திரும்பத் திரும்ப அறிக்கையிடுங்கள்!

உங்களைத் தேவனோடு சரிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நீங்களாகவே இதையும் அதையும் செய்ய முயன்றிருக்கலாம். ஆனால் நீதி அப்படி வருவதில்லை இரட்சிப்பைப் போலவே நீதியும் கிரியையினால் வருவதல்ல; அது ஓர் இலவச ஈவு, அன்பளிப்பு. உங்கள் சுயமுயற்சிகளைக் கைவிடுங்கள்! கிறிஸ்துவின் நீதியை தேவன் உங்களுக்கு அருளும் படியாக அவரில் நம்பிக்கை வைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்!

❤ *"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு (சுமத்திவிடு), அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (தவறவோ, தடுமாறவோ, தோற்கவோ விடமாட்டார்)"* -சங்கீதம் 55:22

ரோமர் 4:1-3ல் பவுல் ஆபிரகாமின் நீதியைப் பற்றிப் பேசுகின்றார்:

❤ *"அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?*

*ஆபிரகாம் கிரியைகளினாலே (தான் செய்த நற்செயல்களினாலே) நீதிமானாக்கப் பட்டானாகில் மேன்மை பாராட்ட ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்ட ஏதுவில்லை (காரணம் இல்லை).*

*வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது."*

பிறகு வசனங்கள் 23, 24ல் தொடர்ந்து கூறுகின்றார்:

❤ *"அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்பது அவனுக்காக மட்டுமல்ல, நமக்காகவும் எழுதப் பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிப்பதினால் நீதியை அடைந்துகொள்கிறோம்"* என்று பவுல் நமக்குச் சொல்லுகிறார்.

நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவுடன் தேவன் நம்மை நீதிமான்களாகக் காண்கிறார். இயேசுவின் இரத்தத்தின் நிமித்தமாக நம்மைத் தம்மோடு சரியான உறவில் இருப்பவர்களாக் காண அவர் தீர்மானம் செய்கின்றார். அவர் இராஜரீகமும் மகத்துவமும் உள்ள தேவன், தாம் விரும்பியதைத் தீர்மானிக்கும் உரிமை அவருக்குண்டு.

அடுத்த அத்தியாயத்தின் முதல் வசனத்தில் பவுல் தமது கருத்தை இரத்தினச் சுருக்கமாக உரைக்கின்றார்:

❤"*இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் (குற்றமற்றவர்கள் என்று, நீதிமான்கள் என்று தீர்ப்பு பெற்றிருப்பதால், தேவனுக்கு முன்பாக சரியான உறவிற்குள் வந்திருப்பதால்), நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் (ஒப்புரவாகி, சமாதானமாகி, அதை அனுபவிக்கிறோம்) பெற்றிருக்கிறோம்.*" (ரோமர் 5:1)

நம்முடைய கிரியைகளின் மூலமாக நீதி வருவதில்லை; அது இயேசு செய்து முடித்த கிரியையினாலே வருகிறது.

சங்கீதம் 37:25 இல் தாவீது ❤"*நான் இளைஞனாய் இருந்தேன்; முதிர்வயது உள்ளவனும் ஆனேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை*" என்று எழுதுகிறார்.

பெற்றோர்களாகிய நாம் கிறிஸ்துவின்மூலம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படும் நிலையைப் பற்றிக் கொண்டால் நமது பிள்ளைகளும் அந்த நீதியைப் பற்றிக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

குற்றவுணர்வோடு, எதற்கும் இலாயக்கற்றவர்கள் என்ற எண்ணத்தோடு வாழும் பெற்றோரால் வளர்க்கப்படும் பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து அப்படிப்பட்ட எண்ணங்களையே பெற்றுக் கொள்வார்கள்.

அதுபோலவே, தேவன் தங்களை நேசிக்கிறார், தாங்கள் அவருக்கு விசேஷித்தவர்கள், தங்கள் வாழ்க்கைக்கென தேவன் அருமையான திட்டம் வைத்திருக்கிறார், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத் தாங்கள் நீதிமான்கள் ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை யெல்லாம் உணர்ந்து, விசுவாசித்திருக்கும் பெற்றோரினால் வளர்க்கப்படும் பிள்ளைகள் இந்தச் சத்தியங்களின் மறைவிலேயே வளருவதால் தங்கள் பெற்றோரின் விசுவாசத்தால் பாதிக்கப்படுவர், தாங்களும் இயேசுவையும் அவர் அருளிய அனைத்து வாக்குத்தத்தங்களையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார்.

நீதிமொழிகள் 20:7 ❤“*நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாய் இருப்பார்கள்*” என்கிறது.

❤சங்கீதம் 37:39ல், “*நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்*” என்று வாசிக்கிறோம்.

கர்த்தர் உங்கள்பட்சத்தில் இருக்கிறார். அவருடைய வசனம் சத்தியம். அது சமாதானத்தையும், நீதியையும், பாதுகாப்பையும், உங்களை விரோதிப்போர்மீது வெற்றியையும் வாக்குப் பண்ணுகிறது.

ஏசாயா 54:17ல் காணப்படும் இந்த வாக்கை அறிக்கை செய்யப்பழகிக் கொள்ளுங்கள்: ❤*“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னால் உண்டான அவர்களுடைய நீதியுமாய் இருக்கிறது”* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சங்கீதம் 34:15ல் தாவீது கூறுகின்றார்:

> ❤*கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாய் இருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.*

இதன் பொருள், தேவன் உங்களை நேசிப்பதால் உங்களையே பார்த்துக் கொண்டு, நீங்கள் சொல்வதையே கேட்டுக்கொண்டு இருக்கிறாராம்.

மேலும் வசனங்கள் 17, 19, 22ல் தாவீது தொடர்ந்து கூறுவதைக் கவனியுங்கள்

> ❤*நீதிமான்கள் கூப்பிடும்போது, கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார்...*
>
> *நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாய் இருக்கும்;கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.*
>
> *கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன்மேலும் குற்றம் சுமராது.*

இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் அந்நேரமுதல் அவரில் வளர ஆரம்பிக்கிறீர்கள். அது ஒரு பயணம் எனலாம். அப்படி நீங்கள் போகின்ற வழியிலே ஒருவேளை சில தவறுகள் செய்யலாம். உங்கள் நடத்தை பரிபூரணமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் உள்ளம் தேவனுடன் உத்தமமாய் இருந்தால், தேவன் உங்களை உத்தமராகவே கருதுவார்.

ஏசாயா 54:14ல் அவர் உரைக்கின்றார் ❤ "*நீதியினால் திடப்பட்டிருப்பாய்; கொடுமைக்குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை.*"

நீதிமொழிகள் 28:1 நீதிமான்கள் சிங்கத்தைப்போல் தைரியமாய் இருப்பார்கள் என்கிறது. நீங்கள் கிறிஸ்துவின்மூலமாக நீதிமான்களாக்கப்பட்டிருப்பதை அறிந்திருக்கையில், இக்காரியத்தில் சரியான வெளிப்பாடு பெற்றிருக்கையில், அப்பொழுது நீங்கள் பயத்திலும், திகிலிலும் வாழமாட்டீர்கள். ஏனென்றால் நீதி துணிச்சலை விளைவிக்கும்:

> ❤ *நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவம் இல்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.*
>
> *ஆதலால், நாம் (நமது பாவங்களுக்கு) இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் உதவி*

*செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தின் (தகுதியற்ற பாவிகளாகிய நமக்குத் தயவும், இரக்கமும் காட்டும் தேவனுடைய சிங்காசனத்தின்) அண்டையிலே சேரக்கடவோம்.*

எபிரெயர் 4:15,16

நாம் குறையற்ற பூரணர்கள் என்பதால் அல்ல, அவர் பாவமில்லாத, பரிசுத்தர், பரிபூரணர் என்பதால் அவருடைய கிருபாசனத்தண்டை நாம் பயப்படாமல் தைரியமாய் செல்லலாம்: ❤ "*இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப் படுவது அதிக நிச்சயமாமே.*" (ரோமர் 5:9)

ஒருவேளை உங்கள் வாழ்க்கை முழுவதும் "என்னிடத்தில் என்ன தவறு?" என்று நீங்கள் யோசித்திருந்திருக்கலாம்.

அப்படியானால், இதோ ஒரு நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்: "**நீங்கள் நீதிமானாக்கப் பட்டிருக்கிறீர்கள்!**"

இப்பொழுது உங்கள் வாழ்வில் ஏதோ ஒன்று **சரியாகி**விட்டது.

எல்லாநேரங்களிலும் மக்கள் அறிக்கை செய்யும்படி நான் ஊக்குவிக்கும் ஒரு காரியம் இதோ: "நான் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே நானில்லை, ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! நான் முன்பிருந்த அதே இடத்தில் இப்போது இல்லை, நான் போக வேண்டிய இடம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன்."

மறந்துவிடாதீர்கள்! - மாற்றம் என்பது தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு முறைமை. நீங்கள் இப்போது அந்த முறைமையில் இருக்கிறீர்கள். அப்படி நீங்கள் மாறிக்கொண்டே வருகையில், தேவன் உங்களை நீதிமானாகக் காண்கிறார்.

நீங்கள் நீதிமான்!இயேசுவின் இரத்தத்தின் மூலமாக தேவன் உங்களை வைத்துள்ள நிலைமை அது.

விசுவாசத்தின் மூலமாக தேவன் ஏற்கனவே உங்களுக்கு அளித்துவிட்ட நீதிமான் என்ற நிலைமையின் வெளிப் பாடுகளே உங்கள் வாழ்வில் இடம் பெறும் மாற்றங்கள்.

தேவனுக்கே மகிமை!

இது வல்லமை மிக்கது!

தேவனுடைய அன்பையும், நீதியையும் நீங்கள் பெற்றுக்கொள்ளும்போது பாதுகாப்பின்மை மற்றும் புறக்கணிப்பின் பயங்களிலிருந்து விடுதலை பெறுவீர்கள்.

இப்பொழுதே சொல்லுங்கள்: “நான் இயேசு கிறிஸ்துவில் தேவனுடைய நீதியாய் இருக்கிறேன்!” இந்தச் சத்தியத்தை ஒவ்வொரு நாளும் பலமுறை அறிக்கையிட ஆரம்பியுங்கள்!

ரோமர் 14:17ல் ❤“*தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாய் இருக்கிறது*” என்று பவுல் கூறுகின்றார். நீதி சமாதானத்துக்கு வழிநடத்தும், சமாதானம் சந்தோஷத்திற்கு வழிநடத்தும்.

உங்களுக்கு ஒருவேளை சமாதானமோ, சந்தோஷமோ குறைவுபடுகிறது என்றால், உங்கள் நீதியைப் பற்றிய சரியான வெளிப்பாடு பெறாமல் இருக்கலாம். தேவன் உங்களை சரீரப் பிரகாரமாகவும், பொருளாதார ரீதியிலும் ஆசீர்வதிக்கவே விரும்புகிறார்.

எனினும், குற்றவுணர்வு கொண்ட மக்களில் பெரும் பான்மையானோர் உண்மையான செழிப்பை ஒருநாளும் கண்டடைவதில்லை. நீதிமான்கள், அதாவது தாங்கள் நீதிமான்கள் என்று அறிந்தவர்கள் செழிப்பார்கள், பத்திரமாய் இருப்பார்கள் என்று வேதம் கற்பிக்கிறது.

உங்களைப் பற்றி ஆண்டவர் என்ன சொல்கிறார் என்று தெரியுமா? சங்கீதம் 1:3ல், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிற மனிதன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலை உதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான் என்றும், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்றும் கூறப்படுகிறது.

தேவனோடு நீங்கள் சரியான உறவிற்குள் வந்திருக்கிறீர்கள் என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். எப்பொழுதும் உங்களிடம் என்ன தவறு இருக்கிறது என்றே யோசித்துக் கொண்டிராதீர்கள்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி யோசுவா 1:8 கூறுவதாவது: ❤*“இந்த நியாயப்பிரமாண புத்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாய் இருக்கும்படி இரவும், பகலும் அதைத் தியானித்துக்*

*கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்."*

நீங்கள் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருந்தால், அதாவது அது உங்கள் அன்றாடப் பழக்கமாகி விட்டால், அப்பொழுது, நீங்கள் நீரோட்டத்தின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலை உதிராமல் இருக்கும் மரத்தைப் போலிருப்பீர்கள், நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் என்று சங்கீதம் 1:2,3 கூறுவதை மறந்துவிடாதீர்கள்!

வசனத்தைத் தியானியுங்கள்! வசனத்தைப் பேசுங்கள்! சாத்தான் உங்கள் மனதைத் தாக்கும்போது, அவனைத் தேவவசனத்தைக்கொண்டு திருப்பித் தாக்குங்கள்! இயேசுவும் வசனத்தைச் சொல்லியே, ❤*"எழுதியிருக்கிறதே!"* என்றுகூறியே அவனை வென்றார் என்பதை நினைவில்கொள்ளுங்கள்! (லூக். 4:4, 8,10)

நீதிமொழிகள் 18:10, ❤*"கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்"* என்கிறது.

சங்கீதம் 72:7, ❤*"அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரன் உள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்"* என்று கூறுகிறது. தேவனில் உங்கள் நீதியை ஏற்றுக்கொள்ளுங்கள்! அப்பொழுது சமாதானத்துடன் செழித்து வாழ்வீர்கள்!

"ஆனால் நான் இதுவரை செய்துவந்திருந்த பயங்கரமான பாவங்களெல்லாம் என்னவாயின?" என்று நீங்கள் யோசிக்கலாம்.

தேவன் தமது மக்களைப் பற்றி எபிரெயர் 10:16-18ல் கூறும் வாக்கியத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

❤ *அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கை யாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை உரைத்தபின்பு,*

*அவர்களுடைய பாவங்களையும், அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்.*

*இவைகள் மன்னிக்கப்பட்டது உண்டானால், இனி பாவத்தின் நிமித்தம் பலி செலுத்தப்படுவது இல்லையே!*

வேறுவிதமாகச் சொன்னால், உங்கள் பாவங்களும், அவற்றுக்கு உண்டான தண்டனையும் மொத்தமாகச் சேர்த்து பரிகரிக்கப்பட்டன. அவை முழுமையாக நீக்கப்பட்டாயிற்று. இயேசு முழுமையாகச் செய்து முடித்த கிரியையினால், உங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் தேட நீங்கள் செய்யக்கூடியது எதுவுமே இல்லை. தேவனைப் பிரியப்படுத்தும்படி நீங்கள் செய்யக் கூடிய ஒரே காரியம், அவர் இலவசமாக உங்களுக்கு அருளுவதை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்வது மட்டுமே!

எபிரெயர் 10:19,20 இயேசு தம்மையே பலியாகக் கொடுத்ததன்மூலம் தேவனிடத்தில் சேருவதற்கு ❤ "*புதிதும்,*

*ஜீவனுமான மார்க்கத்தை*” நமக்கு உண்டாக்கினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய் அவரிடம் சேர அவருடைய இரத்தத்தினாலே (அதன் வல்லமையால், பரிசுத்தத்தால்) நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது என்றும், ஆகவே உண்மையுள்ள இதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் நாம் அவரண்டை சேரலாம் என்றும் கூறுகிறது.

உங்களுக்கும், தேவனுக்கும் இடையே உங்களைப் பிரிக்கும் திரை எதுவும் இருக்க இனி அவசியமில்லை!

என்ன மகத்துவமான செய்தி!

உங்கள் பாவம் நீக்கப்பட்டதால், அகற்றப் பட்டதால், மறக்கப்பட்டதால் நீங்கள் தைரியமாய் தேவனிடம் வந்து, அவரோடு ஐக்கியம் கொள்ளலாம்.

மகிழ்ந்து களிகூருங்கள்! நீங்கள் கிறிஸ்துவில் தேவனுடைய நீதியாய் இருக்கிறீர்கள்! (2 கொரி. 5:21)

# 4

# உங்கள் வாழ்விலுள்ள பயத்தை வெல்லுதல்

உங்களுக்கு உங்களைப் பற்றிய பயங்கள் உண்டா?

"அஞ்சாதே என் பிள்ளையே!" என்ற பாடலின் வரிகளில் தேவன் பேசும் ஜீவ வார்த்தைகளைக் கவனியுங்கள்:

*"அஞ்சாதே என் பிள்ளையே! - உன்*
*அருகில் நானிருக்கிறேன்! எப்போதும்*
*உன் வேதனையை நான் அறிவேன்,*
*உன் கண்ணீரை நான் காண்கிறேன்.*
*அஞ்சாதே என் பிள்ளையே! - உன்*
*அருகில் நானிருக்கிறேன் எப்போதும்.*
*எனக்குச் சொந்தமானதை*
*எப்படிக் காப்பதென நான் அறிவேன்."*

2 தீமோத்தேயு 1:7ல் அப்போஸ்தலனாகிய பவுல், தனது இளம்சீஷனாகிய தீமோத்தேயுவை, பயப்படாமல் தனது ஊழியத்தை நிறைவேற்றும்படி உற்சாகப் படுத்துகிறார்: ❤"*தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியும் உள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.*"

இந்த வசனத்தை நினைவில்கொள்ளுங்கள்! மனப்பாடம் செய்துகொண்டு, கவலையும், பயமும் கொள்ளச் சோதிக்கப்படும்போதெல்லாம் இதைப் பலமுறை வாய்விட்டுச் சொல்லுங்கள்!

பயம் தேவனிடத்திலிருந்து வருவதில்லை. உங்கள் உள்ளத்தைப் பயத்தால் நிரப்ப விரும்புபவன் சாத்தானே. தேவன் உங்கள் வாழ்விற்கென ஒரு திட்டம் வைத்துள்ளார். உங்கள் விசுவாசத்தை அவரில் வைப்பதன் மூலம் அத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்! சாத்தானும் உங்களுக்கென்று ஒரு திட்டம் வைத்திருக்கிறான் என்பதை மறந்துவிட வேண்டாம். நீங்கள் பயப்பட்டீர்களானால் அவனுடைய திட்டத்தையே பெற்றுக்கொள்வீர்கள்.

சங்கீதக்காரனாகிய தாவீது, ❤"*நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்*" (சங்கீதம் 34:4) என்று எழுதுகிறார்.

இயேசு உங்களை விடுவிப்பவர். நீங்கள் அவரை உண்மையாகவே தேடினால், அவர் உங்கள் பயங்களிலிருந்து உங்களை விடுவிப்பார். யோவான் 14:27ல், அவர் பயந்து

நடுங்கிக்கொண்டிருந்த தமது சீஷர்களைப் பார்த்து: ❤"*உங்கள் இதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக!*" என்று சொன்னார்.

பயப்படாமல் இருக்க நீங்கள் தீர்மானிக்க வேண்டும். பயத்தின் ஆவி உங்களை ஆளவோ, ஆட்டிப் படைக்கவோ முடியாது எனும் உறுதியான தீர்மானம் செய்யுங்கள்!

சங்கீதம் 56:3,4ல் தாவீது, ஆண்டவரைப் பற்றிக் கூறுவதாவது:

❤*நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.*

*தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?*

ஏசாயா 41:10ல் கர்த்தர் தமது ஜனத்தைப் பார்த்து: "*நீ பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே! நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்*" என்கிறார்.

எபிரெய நிருபத்தை எழுதியவர், எபிரெயர் 13:5ல் பணத்தையும், பொருட்களையும் சம்பாதித்துவைத்து அதன்மூலம் நமக்குப் பாதுகாப்பு தேடக்கூடாது என்று கூறுகிறார். ஏனெனில், ❤"*நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை*" என்று அவர் சொல்லியிருக்கிறாரே!

தொடர்ந்து அவர் கூறுவதைக் கேளுங்கள்: ❤“*அதனாலே நாம் தைரியங்கொண்டு கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.*” (வசனம் 6)

பயம் என்பதற்கான Fear எனும் ஆங்கிலசொல்லின் விரிவாக்கம் - இதை **False Evidence Appearing Real** (உண்மை போன்ற பொய்சாட்சி) என்று கூறலாம். இப்பொழுது நீங்கள் இருக்கும் சூழ்நிலையே, உங்கள் எதிர்காலம் இருண்டுவிட்டது என்பதற்கான சான்று என்று உங்களுக்குச் சொல்லும்படி சத்துருவானவன் விரும்புகிறான். ஆனால், நமது சூழ்நிலைகள் எவ்வளவு பயங்கரமாக இருந்தாலும், நிலைமை எவ்வளவு மோசமாகக் காணப்பட்டாலும் தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை (மாற்கு 9:17-23) என்று வேதம் கூறுகின்றது.

ஏசாயா 41:13ல் தேவன், ❤“*உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே! நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்*” என்கிறார். இதன் பொருள், கெட்ட செய்தி எதையாவது கேட்கும்போது நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்கள் நம்பிக்கையைத் தேவனில் வையுங்கள்! அவர் எல்லாக் காரியங்களையும் உங்கள் நன்மைக்கென நடத்திமுடிப்பார்.

ரோமர் 8:28ல் அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் எல்லாமே நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது என்று நினைவுபடுத்துகிறார்.

ஏசாயா 43:1-3ல் இப்படி வாசிக்கிறோம்: ❤“*இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே,*

*உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜூவாலை உன் பேரில் பற்றாது. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாய் இருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்!''*

பயத்தைப் பற்றிப் பேசும் இவ்வித வசனங்களை வாய்விட்டுச் சத்தமாகச் சொல்லப் பழகிக்கொள்ளுங்கள்! நீங்கள் தனியாயிருக்கையில் சத்தம்போட்டு இவ்வசனங்களைச் சொல்லுங்கள்! நீங்கள் பயத்தில் வாழத் தயாராயில்லை என்பதை ஆவிக்குரிய மட்டத்தில் உறுதிப்படுத்துங்கள்! தேவவசனத்தை உரத்துச் சொல்வதன்மூலம், பயத்தால் வதைக்கப்படும் ஒரு வேதனையின் வாழ்வை வாழ நீங்கள் விரும்பவில்லை என்பதைச் சாத்தானுக்குத் தெரிவிக்கும் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறீர்கள்!

"பயமானது வேதனையுள்ளது!" என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 4:18). அந்த வேதனையிலிருந்து நம்மை விடுவிக்கவே இயேசு மரித்தார் என்பதை எபேசியர் 3:12,13ல் நாம் காண முடியும். அங்கே பவுல்,

> ❤ *இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால், ...அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.*

*ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அனுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க (பயந்துவிடாதிருக்க, பயத்தினால் சோர்வடையாதிருக்க) வேண்டிக் கொள்கிறேன்... என்று எழுதுகின்றார்.*

சங்கீதம் 46:1-3 கூறுகின்றது:

❤*தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.*

*ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,*

*அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.*

யோசுவா முதலாம் அதிகாரத்தில், தேவன் யோசுவாவிடம் மீண்டும் மீண்டும், ❤"*பலங்கொண்டு திடமனதாயிரு... நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்*" (வசனம் 6,9) என்று சொல்கிறார். எனவே நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. தேவன் யோசுவாவுக்குச் சொன்ன அதே வசனங்கள் உங்களுக்கும் சொந்தந்தான்!

தேவன் உங்களோடுகூட இருக்கிறார். அவர் உங்களை விட்டுவிலகவும் மாட்டார், உங்களைக் கைவிடவும் மாட்டார் (எபிரெயர் 13:5). அவர் தமது கண்களை உங்கள் மீது பதித்து வைத்திருக்கிறார் (சங்கீதம் 33:18). அவர் உங்களைத் தமது உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறார் (ஏசாயா 49:16).

எனவே நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. பயப்படாதீர்கள்! பலங்கொண்டு, திடமனதாயிருங்கள்!

மத்தேயு 6:34ல், மலைப்பிரசங்கத்தில் இயேசு தமது சீஷர்களுக்கு உபதேசித்தாவது: ❤“*ஆகையால் நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவை களுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.*”

மத்தேயு 8:23-27ல், கடலில் ஏற்பட்ட புயலைக் கண்டு சீஷர்கள் நடுநடுங்கியதைப் பார்க்கிறோம்: ❤“*அதற்கு அவர்: அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி, எழுந்து, காற்றையும், கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று*” (வசனம் 26).

லூக்கா 12:25,26ல் இயேசு, ❤“*கவலைப் படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான். மிகவும் அற்பமான காரிய முதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறது என்ன?*” என்று கேட்கின்றார்.

“பயப்படாதே” என்கிறது ஏசாயா 54:4 “*...நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சை அடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்.*”

பிறகு ஏசாயா 35:4ல், ❤“*மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன் கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து*

*உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்*” என்று வாசிக்கிறோம்.

தேவன் உங்களை உள்ளான மனிதனில் பலப்படுத்தும்படியாக, அவரது வல்லமை உங்களை நிறைக்கும்படியாக, பயத்திற்கு இடங்கொடுக்க வரும் சோதனைகளை வெல்லும்படியாக அவரை வேண்டிக்கொள்ளுங்கள்! (எபேசியர் 3:16)

பயத்தைப் பற்றி தேவன் எனக்குக் கொடுத்த ஒரு வெளிப்பாட்டை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தேவன் தமது வசனத்தில் ❤“*பயப்படாதே!*” என்று கூறுகையில், நாம் பயப்படக் கூடாது என்று நமக்குக் கட்டளையிடவில்லை. அவர் உண்மையில் என்ன சொல்கிறார் என்றால், “நீ பயப்படும்போது, அதாவது சாத்தான் உன்னைப் பயத்தால் தாக்கும்போது, பின்னே போகாதே அல்லது ஓடிவிடாதே. நீ பயந்தாலும் தொடர்ந்து முன்செல்” என்றுதான் சொல்கிறார்.

பல ஆண்டுகள் நான் பயப்பட்டபோதெல்லாம் நான் ஒரு கோழை என்றே எண்ணிவந்திருந்தேன். இப்பொழுதோ, பயத்தை மேற்கொள்ளக்கூடிய ஒரேவழி, அதை நேருக்கு நேர், முகத்திற்கு முகம் சந்தித்து, அதன் வழியே கடந்து செல்வதே என்று கற்றுக்கொண்டுள்ளேன். தேவன் எதைச் செய்யச் சொல்கிறாரோ அதைப் பயந்துகொண்டேயாகிலும் செய்துமுடிக்க வேண்டும்.

சங்கீதம் 34:4ல் தாவீது ❤“*நான் கர்த்தரைத் தேடினேன் (நோக்கிக் கதறினேன்), அவர் எனக்கு செவி கொடுத்து,*

*என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்*" என்று எழுதுகிறார். யோவானும், "*அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் (வெளியே தள்ளிக் கதவைப் பூட்டும்); பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல*" (1 யோவான் 4:18) என்கிறார்.

மறந்துவிடாதீர்கள்! தேவன் உங்களை நேசிக்கிறார்! அவர் உங்களை நேசிக்கிறார், அவர் உங்களைப் பூரண அன்புடன் விசாரிக்கிறவர் என்பதால் நீங்கள் பயத்திலிருந்து விடுதலையாகி வாழலாம்.

ஒருவேளை உங்கள் வாழ்வில் இப்பொழுது ஏராளமான பயங்கள் இருக்கலாம்.எனவே பயத்திலிருந்து விடுதலைபெற்று வாழ்வது என்பது முடியாத காரியம் போல் உங்களுக்குத் தோன்றலாம். அப்படியென்றால், நீங்கள் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும்: தேவன் உங்களை எந்தப் பிரச்சனையிலிருந்தும் ஒரேநொடியில் முற்றிலுமாக விடுவிக்க முடியும். ஆனால், பொதுவாக அவர் கொஞ்சம் கொஞ்சமாகவே விடுவிப்பார். எனவே, தேவன் உங்களில் கிரியை செய்துகொண்டிருக்கிறார் என்று நம்பி, உற்சாகம் கொள்ளுங்கள்! தேவன் உங்களில் ஒரு நற்கிரியையைத் தொடங்கிவிட்டார்! அதை அவரே முடிய நடத்துவார்! (பிலிப்பியர் 1:6)

சங்கீதம் 27:1ல் சங்கீதக்காரன், ❤"*கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?*" என்று கேட்கிறார். "*என் சத்துருக்களும், என்*

*பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள். எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாய் இருப்பேன்."*

இன்னும் தொடர்ந்து வசனங்கள் 5,6ல், தீங்குநாளில் அவர் தன்னைத் தமது கூடாரமறைவில் ஒளித்து வைத்துக் கன்மலையின்மேல் உயர்த்துவார் என்றும், தன் தலையைத் தனது சத்துருக்களுக்குமேலாக அவர் உயர்த்துவதால் அவருக்கு ஆனந்த பலியிட்டு, அவரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணப்போவதாகவும் கூறுகின்றார்.

தாவீது மன்னனுக்குச் செய்ததைத் தேவன் உங்களுக்கும் செய்வார். உங்கள் விசுவாசத்தை அவர் பேரில் வையுங்கள்! எல்லாப் பயங்களிலிருந்தும் உங்களை விடுவிக்கக்கூடிய வல்லமை அவருக்கு உண்டு!

தானியேலின் வேண்டுதல் கேட்கப்பட்டது என்று அவருக்கு உறுதிகூறி, அவருடன் பேசின தேவதூதனின் வாக்கியங்களைக் கவனியுங்கள்: ❤ "*தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன் தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளின் நிமித்தம் நான் வந்தேன்."* (தானியேல் 10:12)

தேவன் உங்கள் வேண்டுதலைக் கேட்கவில்லை, உங்களுக்குப் பதில் கொடுக்கப்போவதில்லை என்றெல்லாம்

சாத்தான் சொல்லுவான். தேவனுடைய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்பதை மறந்துவிடாதீர்கள்! (எபேசியர் 6:17). வசனமாகிய ஆவியின் பட்டயத்தாலே சத்துருவை முறியடிப்போம். இந்த வசனங்களை உங்கள் மனதில் பதித்துவையுங்கள்! இரவும், பகலும் தியானியுங்கள்!

தேவவசனத்தால் மட்டுமே சத்துருவை நீங்கள் வீழ்த்தலாம். தேவவசனத்தை நீங்கள் அறிந்திருக்கும்போது மட்டுமே சாத்தானின் பொய்களை அடையாளம் காண முடியும். தேவவசனத்தை அறிக்கை செய்யுங்கள்! அது உங்களை வெற்றியினிடத்திற்குக் கொண்டுவரும்.

ஒருவேளை உங்களது மேலதிகாரிகளிடம் பேச நீங்கள் பயப்படலாம். ஒருவேளை உங்கள்மேல் ஏதோவொரு குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. உங்கள் நியாயத்தை எடுத்துச்சொல்ல நினைக்கிறீர்கள். ஆனால் என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்று கலங்குகிறீர்கள். லூக்கா 12:11,12ல் இயேசுவின் வசனத்தை கவனியுங்கள் ❤ "*...ஜெப ஆலயத்தலைவர்களுக்கும், துரைத்தனத்தார்களுக்கும், அதிகாரம் உள்ளவர்களுக்கும் முன்பாக உங்களைக் கொண்டுபோய் விடும்போது: எப்படி என்னத்தை மறுத்தரமாகச் சொல்வோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள். நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார்.*"

பயத்திற்கு இடங்கொடுக்க நீங்கள் சோதிக்கப் படுகையில் சங்கீதம் 23ஐ உங்கள் சொந்தவிசுவாசத்தின் அறிக்கையாக,

அவர் உங்களை அன்புடன் பராமரிக்கிறார், கண்காணிக்கிறார் என்ற விசுவாசத்தின் அறிக்கையாக சத்தமாகச் சொல்லுங்கள்:

❤ *கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.*

*அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.*

*அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தின் நிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.*

*நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்.*

*என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பிவழிகிறது.*

*என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.*

# முடிவுரை:
# உறுதியாக நில்லுங்கள்!

ஃ

இந்நூலில் தேவனுடைய அன்பு, அவர் உங்களுக்காகத் திட்டமிட்டுவைத்துள்ள மாட்சிமிக்க எதிர்காலம், கிறிஸ்துவில் உங்கள் நீதி, பயத்திலிருந்து விடுதலை இவை பற்றிய வேதவசனங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

இங்கேக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குகள் அனைத்தும், கர்த்தருடைய ஊழியக்காரனாக, ஊழியக்காரி என்ற முறையில் உங்களது பூர்வீக சொத்துக்களாகும். எனினும், அவற்றை உங்களிடமிருந்து திருட பிசாசானவன் முயற்சி செய்வான் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். மீண்டுமாக அடிமைத் தனத்திற்குள் நீங்கள் போகும்படி அவன் விரும்புவான்.

ஆகையால்தான் பவுல் அப்போஸ்தலன், கலாத்தியர் 5:1ல், ❤ "*ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்கு உட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்*" என்று எழுதுகிறார்.

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் இரகசியங்களில் சில உறுதியாக நிலைகொண்டிருத்தல், பொறுமை மற்றும் சகிப்புத்தன்மை ஆகும்.

❤ *ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.*

*நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.*

எபிரெயர் 10:35,36

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலை கொடுத்து வாங்கப்பட்ட அனைத்தையும் நீங்கள் முழுமையாக அனுபவித்து, மகிழ வேண்டுமென்று உங்கள் பரமபிதா விரும்புகிறார். இதிலே உறுதியாய் இருங்கள்! ஒருபோதும் மனந்தளரமாட்டேன் என்று இப்பொழுதே ஒரு தீர்மானம் செய்யுங்கள்! உங்களிலே ஒரு பகுதியாகவே மாறும்வரை, பின்வரும் பகுதியிலுள்ள வேதவசனங்களை மறுபடியும், மறுபடியும் அறிக்கை செய்யுங்கள்!

ஒன்றை மட்டும் மறந்துவிடாதீர்கள்! தேவன் உங்களை நேசிக்கிறார். அவருடைய வசனங்களில் ஜீவன் உண்டு!

# வேதவசன அறிக்கைகள்

*(தனிப்பட்ட விதத்தில் வசனங்களை அறிக்கையிடுவதற்கு வசதியாக, வசனங்கள் தன்மை ஒருமையில் மாற்றி எழுதப்பட்டுள்ளன.)*

## முன்னுரை: தேவனுடைய வசனம்

அவர் தமது வசனத்தை அனுப்பி, என்னைக் குணமாக்கி, என்னை அழிவுக்குத் தப்புவிக்கிறார். (சங்கீதம் 107:20)

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் (அவர்கள் அறிவுரையைக் கேட்டு அதன்படி நடக்காமல்), பாவிகளுடைய வழியில் நில்லாமலும் (அவர்களுக்கு இணங்காமல்), பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் (அவர்களோடு அமர்ந்து அனுபவியாமல்), கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற நான்

பாக்கியவான் (சந்தோஷம் பெற்றவன், செழிப்பு பெற்றவன், பாக்கியம் பெற்றவன்).

நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பேன்; நான் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:1-3)

இந்த நியாயப்பிரமாண புத்தகம் என் வாயை விட்டுப் பிரியாதிருக்கும்; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நான் செய்யக் கவனமாய் இருக்கும்படி, இரவும், பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பேன்; அப்பொழுது நான் என் வழியை வாய்க்கப் பண்ணுவேன், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவேன். (யோசுவா 1:8)

நான் அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது எனக்கு மிகவும் சமீபமாய் என் வாயிலும், என் இதயத்திலும் இருக்கிறது. (உபாகமம் 30:14)

அப்படியே தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் அவரிடத்திற்குத் திரும்பாமல், அது அவர் விரும்புகிறதைச் செய்து, அவர் அதை அனுப்பின காரியம் ஆகும்படி வாய்க்கும். (ஏசாயா 55:11)

நான் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாய் இருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறேன். (2 கொரிந்தியர் 3:18)

தேவனுடைய வசனமே சத்தியம். நான் அதைப் படித்துத் தியானிக்க, தியானிக்க சத்தியத்தை அறிவேன், சத்தியம் என்னை விடுதலையாக்கும். (யோவான் 17:7; 8:32)

# அத்தியாயம் 1: தேவனுடைய அன்பு

இவை எல்லாவற்றிலேயும் நான் என்னில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவனாய் இருக்கிறேனே.

மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் என்னுடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு என்னைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:37-39)

தேவன், தம்முடைய ஒரேபேறான (ஒப்பும், நிகரும் அற்ற) குமாரனை விசுவாசிக்கிற (நம்புகிற, பற்றிக் கொள்கிற, சார்ந்துகொள்கிற) நான், கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் என்னில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

நான் இயேசுவைச் சிநேகித்து, அவர் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தார் என்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே என்னைச் சிநேகிக்கிறார். (யோவான் 16:27)

நான் இயேசுவின் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறபடியினால் அவரிடத்தில்

அன்பாய் இருக்கிறேன், அவரிடத்தில் அன்பாயிருக்கிற நான் அவருடைய பிதாவுக்கு அன்பாயிருப்பேன்; இயேசுவும் என்னில் அன்பாயிருந்து எனக்குத் தம்மை வெளிப்படுத்துவார். (யோவான் 14:21)

அவர் முந்தி (முதலில்) என்னிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நானும் அவரில் அன்புகூருகிறேன். (1 யோவான் 4:19)

தேவனே, உம்முடைய கிருபை (மாறாத அன்பு) எவ்வளவு அருமையானது! அதினால் நான் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறேன். (சங்கீதம் 36:7)

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும், என் எழுந்திருத்தலையும் நீர் அறிந்திருக்கிறீர்: என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடத்தாலும், படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புத்திலும், பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.

இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாய் இருக்கிறது. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?

தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால் மணலைப்

பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம் அண்டையில் இருக்கிறேன்! (சங்கீதம் 139:1-7; 17, 18)

ஆனாலும் எனக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார் (எதிர்பார்த்திருப்பார், ஏங்கியிருப்பார்), என்மேல் மனதுருகும்படி எழுந்தரிப்பார்; கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற (எதிர்பார்த்திருக்கிற, ஏங்கியிருக்கிற) நான் பாக்கியவான். (ஏசாயா 30:18)

அவர் என்னைத் திக்கற்றவனாக (அனாதையாக, ஆதரவற்றவனாக) விடமாட்டார், என்னிடத்தில் வருவார். (யோவான் 14:18)

என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் (தம் பிள்ளையாகச்) சேர்த்துக்கொள்ளுவார். (சங்கீதம் 27:10)

விசுவாசத்தினாலே கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்கிறார்; நான் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவனாய் இருக்கிறேன்.

சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று நான் உணர்ந்திருக்கின்றேன்.

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவனாய் இருக்கிறேன். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட்டிருக்கின்றேன். (எபேசியர் 3:17-19)

பிதா இயேசுவில் அன்பாயிருக்கிறது போல இயேசுவும் என்னில் அன்பாயிருக்கிறார்; அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறேன். ஒருவன் தன் சிநேகிதருக்குத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை. (யோவான் 15:9,13)

நான் பாவியாய் இருக்கையில் கிறிஸ்து எனக்காக மரித்ததினால், தேவன் என் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். (ரோமர் 5:8)

தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே, இயேசுவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் எனக்கு உண்டாயிருக்கிறது. (எபேசியர் 1:7)

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், அவருடைய கிருபை என்னை விட்டு விலகாமலும், அவருடைய சமாதானத்தின் உடன்படிக்கை நிலை பெயராமலும் இருக்கும் என்று என் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 54:10)

என்னை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். வாக்கைக் காப்பவர், நம்பத்தக்கவர். (1 கொரிந்தியர் 1:9)

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

அவர் என் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, என் நோய்களை எல்லாம் குணமாக்கி,

என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, என்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி. (சங்கீதம் 34:1-8)

நன்மையினால் என் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் என் வயது திரும்ப வாலவயது போலாகிறது.

கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார்; என்றைக்கும் கோபம் கொண்டிரார்: பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாய் இருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் என் பாவங்களை என்னை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்திருக்கும் எனக்கு இரங்குகிறார்.

கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும் அவருடைய நீதி அவர்களுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. (சங்கீதம் 103:1-5, 8, 9, 11-13, 17)

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக் கேட்டு மகிழ்வார்கள். என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவி கொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை

நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசம் அடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டேன், கர்த்தர் கேட்டு என்னை என் இடுக்கண்களுக்கு எல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார்.

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்திருக்கிறேன்; அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 34:1-8)

# அத்தியாயம் 2: உங்கள் எதிர்காலம்

சிறுமைப்பட்டவனுடைய (கவலை கொண்டவன்) நாட்கள் எல்லாம் தீங்குள்ளவைகள்; என்னுடைய மனரம்மியமோ நித்திய விருந்து. (நீதிமொழிகள் 15:15)

நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய (கர்த்தர் எனக்குச் செய்யும்) நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திருப்பேன்; அவர் என் இதயத்தை திடப்படுத்துவார்; திடமனதாய் இருந்து, கர்த்தருக்கே காத்திருப்பேன். (சங்கீதம் 27:13,14)

நான் எதிர்பார்த்திருக்கும் முடிவை எனக்குக் கொடுக்கும்படிக்கு தேவன் என் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிந்திருக்கிறார் என்பதாகக் கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கு அல்ல, சமாதானத்துக்கு ஏதுவான நினைவுகளே! (எரேமியா 29:11)

என் ஆத்துமாவே, நீ என் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும், என் தேவனுமாய் இருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன். (சங்கீதம் 42:11)

எனக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு என்னுடைய இதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிற படியால், அந்த நம்பிக்கை என்னை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5)

தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும், மகிமையையும் அருளுவார்; நான் உத்தமமாய் நடப்பதால் எனக்கு நன்மையை வழங்காமல் இருக்கமாட்டார். (சங்கீதம் 84:11)

என்னில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடியநடத்தி வருவார் என்று நம்பியிருக்கிறேன். (பிலிப்பியர் 1:6)

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நான் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாய் இருக்கிறேன்; அவைகளில் நான் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10)

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலம் உண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயம் உண்டு. ஆகையால் ஏற்றகாலத்தில் தேவன் என்னை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்பேன். (பிரசங்கி 3:17; 1 பேதுரு 5:6)

தேவன் திட்டம் பண்ணியிருக்கிற காரியங்கள் உடனே நடைபெற்றுவிடாது. குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. மெல்ல, மெல்ல அது விளங்கும். அது பொய்சொல்லாது; அது தாமதிப்பதுபோல் தோன்றினாலும் அதற்குக் காத்திருப்பேன்; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை. நான் பொறுமையோடே அதற்குக் காத்திருப்பேன்! (ஆபகூக் 2:3)

எனக்கு முன்வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த எனக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதல் உண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய் உரையாத தேவன் அப்படிச் செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்துமநங்கூரமாய் இருக்கிறது. (எபிரெயர் 6:18,19)

நான் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவனாய்த் தேவனிடத்தில் அன்புகூருவதால் சகலமும் எனது நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறேன். (ரோமர் 8:28)

என் தேவன் நான் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் எனக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே எனக்குச் செய்ய வல்லவராய் இருக்கிறார். (எபேசியர் 3:20)

தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவனுடைய தீர்மானத்தின்படியே, நான் முன்குறிக்கப்பட்டு,

கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்திரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டேன். (எபேசியர் 1:12)

இந்த நியாயப் பிரமாண புத்தகம் என் வாயை விட்டு பிரியாதிருக்கும்; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நான் செய்யக் கவனமாய் இருக்கும்படி, இரவும், பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பேன்; அப்பொழுது நான் என் வழியை வாய்க்கப்பண்ணுவேன், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்வேன். (யோசுவா 1:8)

நான் அந்த வார்த்தையின்படியே செய்யும் பொருட்டு, அது எனக்கு மிகவும் சமீபமாய் என் வாயிலும் என் இதயத்திலும் இருக்கிறது. (உபாகமம் 30:14)

அப்படியே தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் அவரிடத்திற்குத் திரும்பாமல் அது அவர் விரும்புகிறதைச் செய்து, அவர் அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசாயா 55:11)

நான் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாய் இருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறேன். (2 கொரிந்தியர் 3:18)

நான் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக, என் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகிறேன். (ரோமர் 12:2)

புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவானாகிய எனக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக எனக்குள் இருப்பதே அந்த இரகசியம். (கொலோசெயர் 1:27)

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல நானும், என்னை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறேன் என்று தெரியப்படுத்துகிறேன். (ரோமர் 4:17; 1 பேதுரு 2:9)

அவருடைய சம்பத்தை (விலையுயர்ந்த ஆபரணங்களை, பொக்கிஷத்தை) அவர் சேர்க்கும்நாளிலே நான் அவருடையவனாய் இருப்பேன்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியம் செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல அவர் என்னைக் கடாட்சிப்பார். (மல்கியா 3:17)

அப்போஸ்தலனாகிய பவுலைப்போலவே நானும் அதைப் பிடித்துக்கொண்டேன் (அடைந்துவிட்டேன்) என்று எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பிலிப்பியர் 3:13,14)

நான் முந்தினவைகளை நினைக்கிறதும் இல்லை; பூர்வமானவைகளைச் சிந்திக்கிறதும் இல்லை.

இதோ, கர்த்தர் புதிய காரியத்தைச் செய்கிறார்! இப்பொழுதே அது தோன்றும் நான் அதை அறிவேன். அவர் (எனக்காக) வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவார். (ஏசாயா 43:18,19)

நான் கர்த்தருக்குச் சொந்தமானவன். ஆதலால், அவர், அவரே என் மீறுதல்களை அவர் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறார்; என் பாவங்களை நினையாமலும் இருப்பார். (ஏசாயா 43:25)

நான் கர்த்தருக்குக் காத்திருப்பதால் புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவேன்; நான் ஓடினாலும் இளைப்படைய மாட்டேன்; நடந்தாலும் சோர்ந்துபோகமாட்டேன். (ஏசாயா 40:31)

தேவன் எனக்கு வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று முழுநிச்சயமாய் நம்பியிருக்கிறேன். ஏனெனில் நான் நிறைவேற்ற வேண்டிய தெய்வீக எதிர்காலத்திட்டம் ஒன்று எனக்காக வைக்கப்பட்டுள்ளது. (ரோமர் 4:21)

# அத்தியாயம் 3:
# கிறிஸ்துவில் உங்கள் நீதி

நான் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு (அவருடைய தயவினாலே, அவருக்கு முன் அங்கீகரிக்கப்படும்படி, ஏற்றுக் கொள்ளப்படும்படி, சரியான உறவிற்குள் வரும்படி), பாவம் அறியாத (பாவமே அற்ற

பரிசுத்தரான) கிறிஸ்துவை, எனக்காகப் (என் நிமித்தமாக) பாவமாக்கினார். (2 கொரிந்தியர் 5:21)

தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தரங்கள்பரியந்தமும் விளங்குகிறது; உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது. (சங்கீதம் 48:10)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நான் குற்றம் சாட்டப்படாதவனாய் இருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் என்னை ஸ்திரப்படுத்துவார் (நிலைநிறுத்துவார், உறுதிப் படுத்துவார், உத்தரவாதம் தருவார்) (1 கொரிந்தியர் 1:8)

பாக்கியமும், பேறும், சந்தோஷமும், ஆவிக்குரிய செழிப்பும் (மறுபடியும் பிறந்த ஒரு தேவபிள்ளையின் அனுபவம்) பெற்ற நான் நீதியின்மேல் பசிதாகம் உள்ளவன்; நான் திருப்தி அடைவேன். (மத்தேயு 5:6)

கர்த்தர்மேல் என் பாரத்தை வைத்துவிடுகிறேன், அவர் என்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார் (தள்ளாட விடமாட்டார்). (சங்கீதம் 55:22)

ஆபிரகாமின் விசுவாசமானது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்பது, அவனுக்காக மட்டும் அல்ல, எனக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. என்னுடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற எனக்கும் அப்படியே எண்ணப்படும். (ரோமர் 4:23, 24)

இவ்விதமாக, நான் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால், என்னுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறேன். (ரோமர் 5:1)

நான் நீதிமான் ஆதலால் என் உத்தமத்திலே நடக்கிறேன்; எனக்குப் பிறகு என் பிள்ளைகளும் பாக்கியவான்களாய் இருப்பார்கள். (நீதிமொழிகள் 20:7)

நான் நீதிமான் ஆதலால், என் இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக் காலத்தில் அவரே என் அடைக்கலம். (சங்கீதம் 37:39)

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துவேன்; இது கர்த்தருடைய ஊழியக்காரனாக என்னுடைய சுதந்திரமும், அவரால் உண்டான என்னுடைய நீதியுமாய் இருக்கிறது. (ஏசாயா 54:17)

நான் நீதிமான் ஆதலால் கர்த்தருடைய கண்கள் என்மேல் நோக்கமாய் இருக்கிறது; அவருடைய செவிகள் என் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

நான் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, என்னை என்னுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

எனக்கு வரும் துன்பங்கள் அநேகம்; கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று என்னை விடுவிப்பார்.

நான் கர்த்தருடைய ஊழியக்காரன் ஆதலால், அவர் என் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நான் நம்புவதால் என்மேல் குற்றம் சுமராது. (சங்கீதம் 34:15,17,19, 22)

நான் நீதியினால் திடப்பட்டிருப்பேன்; கொடுமைக்குத் தூரமாவேன்; பயமில்லாதிருப்பேன்; திகிலுக்குத் தூரமாவேன், அது என்னை அணுகுவதில்லை. (ஏசாயா 54:14)

நான் நீதிமான் ஆதலால், சிங்கத்தைப்போலத் தைரியமாய் இருப்பேன். (நீதிமொழிகள் 28:1)

என்னுடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத (அனுதாபப்பட முடியாத) பிரதான ஆசாரியர் எனக்கு இராமல், எல்லாவிதத்திலும் என்னைப் போல் சோதிக்கப்பட்டும், பாவம் இல்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியரே எனக்கு இருக்கிறார்.

ஆதலால் நான் (தவறிப் பாவத்தில் விழும்போது) இரக்கத்தைப் பெறவும், (தேவைப்படும் நேரங்களில்) ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே (எனது அபாத்திரத் தன்மைக்கு மேலான, நிபந்தனையற்ற தேவனுடைய அன்பின், தயவின் சிங்காசனம்) சேருவேன். (எபிரெயர் 4:15,16)

இப்படி நான் அவருடைய இரத்தத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நான் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (ரோமர் 5:9)

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் (அவர்கள் அறிவுரைகளின்படி செய்யாமல்), பாவிகளுடைய வழியில் நில்லாமலும் (அவர்களோடு ஒத்துப்போகாமல்), பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் (அவர்களோடு அமர்ந்து அனுபவியாமல்).

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருக்கிற நான் பாக்கியவான் (சந்தோஷம் பெற்றவன், செழிப்பு உடையவன், பாக்கியம் பெற்றவன்).

நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலை உதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பேன்; நான் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:1-3)

இந்த நியாயப்பிரமாண புத்தகம் என் வாயை விட்டுப் பிரியாதிருக்கும்; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நான் செய்யக் கவனமாய் இருக்கும்படி, இரவும் பகலும், அதைத் தியானித்துக் கொண்டிருப்பேன்; அப்பொழுது நான் என் வழியை வாய்க்கப் பண்ணுவேன், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்வேன். (யோசுவா 1:8)

கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமானாகிய நான் அதற்குள் ஓடிச் சுகமாய் இருப்பேன். (நீதிமொழிகள் 18:10)

இயேசு கிறிஸ்துவின் நாட்களில் நீதிமானாகிய நான் செழிப்பேன்; சந்திரன் உள்ளவரைக்கும் எனக்கு மிகுந்த சமாதானம் இருக்கும். (சங்கீதம் 72:7)

தேவன் என்னோடே பண்ணும் உடன்படிக்கையாவது: அவர் தம்முடைய பிரமாணங்களை என்னுடைய இதயத்தில் வைத்து, அவைகளை என்னுடைய மனதில் எழுதுவார்.

என்னுடைய பாவங்களையும், என்னுடைய அக்கிரமங்களையும் அவர் இனி நினைப்பதில்லை.

இவைகள் மன்னிக்கப்பட்டுவிட்டதால் இனி பாவத்தின் நிமித்தம் பலி செலுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லையே! (எபிரெயர் 10:16-18)

நான் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை எனக்கு உண்டு பண்ணியிருக்கிறபடியால்,

அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே எனக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது. (எபிரெயர் 10:19, 20)

*நான் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை எனக்காக பாவமாக்கினார் (2 கொரி 5:21).*

# அத்தியாயம் 4: பயத்தை வெற்றிகொள்ளுதல்

தேவன் எனக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் (கோழைத் தனத்தின், நடுக்கத்தின் ஆவி), பலமும் அன்பும் தெளிந்த புத்தியும் உள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத்தேயு 1:7)

நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவி கொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார். (சங்கீதம் 34:4)

என் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கும். (யோவான் 14:27)

நான் பயப்படுகிற நாளில் தேவனை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்? (சங்கீதம் 56:3,4)

நான் பயப்படத் தேவையில்லை, தேவன் என்னுடனே இருக்கிறார்; நான் திகைத்துநிற்பதில்லை, ஏனெனில் அவர் என் தேவன்; அவர் என்னைப் பலப்படுத்தி, எனக்குச் சகாயம் பண்ணுவார்; தமது நீதியின் வலதுகரத்தினால் என்னைத் தாங்குவார். (ஏசாயா 41:10)

நான் உன்னை விட்டுவிலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை, *(இல்லவே இல்லை)* என்று தேவன் சொல்லியிருக்கிறாரே.

அதினாலே நான் தைரியம் கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன், எனக்கு என்ன செய்வான் என்று சொல்லுவேன். (எபிரெயர் 13:5,6)

என் தேவனாய் இருக்கிற கர்த்தர் என் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறார். (ஏசாயா 41:13)

அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவனாய் அவரிடத்தில் அன்புகூருகிற எனக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது (அவருடைய நன்மையான திட்டத்திற்கு இசைவாய் நடக்கிறது) என்று அறிந்திருப்பதால் எனக்குப் பயமேதும் இல்லை. (ரோமர் 8:28)

என்னை உருவாக்கினவரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாய் இருக்கிற உன் தேவனாகிய கர்த்தர். (ஏசாயா 43:1-3)

நான் பயப்படமாட்டேன், ஏனெனில் பயமானது வேதனை உள்ளது.

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் எனக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடேதேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.

ஆகையால் நான் பயத்தினால் சோர்ந்துபோக மாட்டேன். (1 யோவான் 4:18; எபேசியர் 3:12,13)

தேவன் எனக்கு அடைக்கலமும், பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.

ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள்

கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நான் பயப்படமாட்டேன். (சங்கீதம் 46:1-3)

நான் பலங்கொண்டு, திடமனதாயிருப்பேன்; நான் திகைக்கமாட்டேன், கலங்கமாட்டேன்; நான் போகும் இடமெல்லாம் என் தேவனாகிய கர்த்தர் என்னோடே இருக்கிறார். (யோசுவா 1:9)

நான் பயப்படமாட்டேன்; தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிற என் ஆத்துமாவை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்; பஞ்சத்தில் என்னை உயிரோடே காக்கவும்: கர்ததருடைய கண் என்மேல் நோக்கமாய் இருக்கிறது. (சங்கீதம் 33:18)

நான் நாளைக்காகக் கவலைப்படமாட்டேன்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப் படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். (மத்தேயு 6:34)

நான் பயப்படமாட்டேன், ஏனெனில் நான் வெட்கப்படுவதில்லை; நான் நாணமாட்டேன், ஏனெனில் நான் இலச்சை அடைவதில்லை; என் வாலிபத்தின் வெட்கத்தை நான் மறந்து, என் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பேன்.

என் சிருஷ்டிகரே என் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் என் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். (ஏசாயா 54:4,5)

என் மனம் பதறுகையில் என்னை நானே பார்த்து: பயப்படாதே, திடன்கொள்; இதோ, உன் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உன் தேவன் பதிலளிக்கவும் வருவார்;

அவர் வந்து உன்னை இரட்சிப்பார் என்று சொல்லுவேன். (ஏசாயா 35:4)

நான் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்... தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே எனக்கு அனுக்கிரகம் பண்ணுவார். (எபேசியர் 3:16)

என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். (சங்கீதம் 34:3,4)

நான் பயப்படமாட்டேன், ஏனெனில் அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, நான் அன்பில் பூரணப் பட்டவன், ஆகையால் நான் பயப்படுவதில்லை. (1 யோவான் 4:18)

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

என் சத்துருக்களும், என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள்.

எனக்கு விரோதமாக ஒரு பாளயம் இறங்கினாலும் என் இதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாய் இருப்பேன்.

தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடாரமறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்குமேலாக உயர்த்தப்படும்; அதின் நிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளை இட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன். (சங்கீதம் 27:1-3, 5,6)

நான் பயப்படமாட்டேன்; (ஏனெனில்) நான் அறிவை அடைகிறதற்கும், என்னை என் தேவனுக்கு முன்பாகச் சிறுமைப் படுத்துகிறதற்கும், என் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி என் வார்த்தைகள் கேட்கப்பட்டது; என் வார்த்தைகள் நிமித்தம் தேவன் தமது தூதனை அனுப்பினார். (தானியேல் 10:12)

துரைத்தனத்தார்களுக்கும் அதிகாரம் உள்ளவர் களுக்கும் முன்பாக என்னைக் கொண்டு போய் விடும்போது: எப்படி, என்னத்தை மாறுத்தரமாகச் சொல்வேன் என்றும், எதைப் பேசுவேன் என்றும் கவலைப்படமாட்டேன். நான் பேச வேண்டி யவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே எனக்குப் போதிப்பார். (லூக்கா 12:11,12)

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சி அடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தின் நிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்தநாட்களாய் நிலைத்திருப்பேன். (சங்கீதம் 23:1-6)

## முடிவுரை: உறுதியாக நில்லுங்கள்

*ஆனபடியினாலே, நான் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து எனக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருப்பேன் (கலாத்தியர் 5:1)*

*ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான என் தைரியத்தை விட்டுவிடாதிருப்பேன்.*

*நான் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற்றுக்கொள்ள தேவையான பொறுமையை பெற்றுக் கொண்டிருக்கிறேன் (எபிரேயர் 10:35,36)*

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் “நம்பிக்கையின் கரம்” என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

# தேவனோடு தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்வதற்கான ஜெபம்

மற்ற எல்லாவற்றையும்விட இயேசு உங்களை இரட்சிக்கவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பவும் விரும்புகிறார். நீங்கள் சமாதானபிரபுவாகிய இயேசுவை உங்கள் ஆண்டவராகவும், மீட்பராகவும் இதுவரை ஒருபோதும் அழைத்திராவிட்டால், நீங்கள் அவ்வாறு செய்யும்படி இப்பொழுது நான் உங்களை அழைக்கிறேன். கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் இதை முழுமனதோடு உண்மையாகவே செய்தால், கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதுவாழ்க்கையை உணருவீர்கள்.

*பிதாவே,*

*நீர் உலகத்தை இவ்வளவாக நேசித்தீர், உம்முடைய ஒரே குமாரனை எங்களுடைய பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தீர், அதனால் அவருக்குள் விசுவாசிக்கிறவன் எவனும் அழிந்துபோகாமல், நித்தியவாழ்வைப் பெறுகிறான்.*

*உம்மிடத்திலிருந்துப் பெற்ற வெகுமதியான, விசுவாசத்தின் மூலமாய் கிருபையாக இரட்சிக்கப்பட்டோம் என்று*

*உம்முடைய வசனம் சொல்கிறது. நாங்கள் இரட்சிப்படைய எங்களால் எதுவும் செய்ய இயலாது.*

*உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே உலகத்தின் மீட்பர் என்று நான் நம்பி, என் வாயினால் அறிக்கையிடுகிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, அதற்கான கிரயத்தை செலுத்தி சிலுவையில் எனக்காக மரித்தார். நீர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினீர் என்று என் இதயத்தில் விசுவாசிக்கிறேன்.*

*நீர், என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நான் இயேசுவை என்னுடைய ஆண்டவராக அறிக்கையிடுகிறேன். உம்முடைய வசனத்தின்படி நான் இரட்சிக்கப்பட்டேன், உம்முடன் நித்தியத்தைக் கழிப்பேன். பிதாவே! உமக்கு நன்றி!*

*நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

யோவான் 3:16; எபேசியர் 2:8,9 ரோமர் 10:9,10; 1 கொரிந்தியர் 15:3,4; 1 யோவான் 1:9; 4:14-16, 5:1,12,13 பார்க்கவும்.

To contact the author in the United States, please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

To contact the author in India, please write:
Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org